பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 22, திங்கட்கிழமை 07.11.2016 கதிர் 02


ஐங்கரன்
மோட்டோஸ்
சியாட் ரயர், Fevical, தயாரிப்புகளின் ஏக விநியோகஸ்தர்கள், ஓட்டோ, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாக விற்பனையாளர்.
சந்தை முன்பாக, யாழ்.வீதி, மானிப்பாய்
தொ.பே.: 021 225 5150
(இ-002)

# அரசமைப்பு பேரவையின் நகர்வில் சந்தேகம் நீடிக்க மக்களுக்கு வெறுமனே நம்பிக்கையை ஊட்டலாமா?

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் விசனத்துடன் கேள்வி

வடமராட்சி, நவம்பர் 07

**அரசமைப்பு பேரவையில் இடம்பெறும் நகர்வுகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுப்பனவாக அமைய வில்லை. இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதில் பல தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்கு ஆதரவு, சர்வஜன வாக்கெடுப்பு என்று பல இக்கட்டுக்கள் உள்ளன. இவை எல்லாவற்றையும் தாண்டி வரும் சூழ்நிலை இல்லாத போது வெறுமனே நம்பிக்கையைக் கொடுத்துக்கொண்டிருப்பதால் என்ன பயன்?**

**- இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் வடக்கு மாகாண முதல்வர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.**

நேற்றுவடமராட்சி, கரவெட்டியில்மூத்த ஊடகவியலாளர்வீ.தனபாலசிங்கத்துக்கு 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கும் வைபவம் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் பங்குபற்றி, ஊடகவியலாளர் தனபாலசிங்கத்தைப் பாராட்டி, கௌரவம் வழங்கிஉரையாற்றியபோதே முதல்வர் விக்னேஸ்வரன் இப்படிக்கேள்விஎழுப்பினார். இவ்விடயம்தொடர்பில்அங்கு அவர் கூறிய விடயங்கள் வருமாறு:-



தமிழர்களின் நியாய மான அபிலாஷைகளுக்காக குரல்கொடுக்கும்போது எம்மை தீவிரவாதிகள் அல்லது கடும் போக்காளர்கள் என முத்திரை குத்துகின்றார்கள். இவ்வாறான ஒரு போக்கை அண்மைக்காலத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு முத்திரை குத்துவது, மரணபயம் ஏற்படுத்துவது போன்றவை எமது வாய்களை அடைக்கச் செய்வதற்காகவா என்ற சந்தேகந்தான் இப்போது எனக்கு ஏற்படுகின்றது. இவற்றின் பின்னணியில் ஓர் அரசியல் நோக்கம் இருப்பதாகவே நான் சந்தேகிக்கின்றேன். எமதுவாய்களைஅடைத்துவிட்டால், தாம் விரும்பும் ஒரு தீர்வைக் கொண்டுவர முடியும்என அரசாங்கத் தரப்பினர் சிந்திக்கலாம். மாகாணசபைத் தேர்தலின் போது மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாம் எதனைச் சொல்லி வாக்குக் (20 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் படுகொலைப் பின்னணியை கண்டறிய வலியுறுத்தி கவனவீர்ப்பு

### ஏழு கட்சிகள் கூட்டாக நடவடிக்கை

மந்திகை, நவ. 07

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் படுகொலைசெய்யப்பட்டமையைக் கண்டித்தும் அதன்பின்னணியைக்கண்டறிய வலியுறுத்தியும் கவனவீர்ப்புப் போராட்டம்ஒன்றைநடத்துவதற்கு ஏழு தமிழ் அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன. மேலும் இந்தப் படுகொலையைத் தொடர்ந்து வடக்கில்ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வரவும் அவை தீர்மானித்துள்ளன.

வல்லை வெளியில் உள்ள தனியார் விடுதியொன்றில் தமி (20 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் இளைஞர் இலங்கையில் வைத்து கைதானமைக்கு எதிராக லண்டனில் வழக்கு

### சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு முயற்சி

கொழும்பு, நவ.07

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக பிரித்தானிய நீதிமன்றத்தில்வழக்குதாக்கல் செய்வதற்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையில் நல்லாட்சி அரசாங்கத்தினால்தமிழர்கள்கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப் படவுள்ளது.

பிரித்தானியாவில் அரசியல் தஞ்சமடைந்த ரேணுகாரூபன் வேலாயுதபிள்ளை திருமணம் செய்துகொள்வதற்காக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கைக்குச் சென்றார்.

அச்சமயம் பொலிஸார் வீட்டுக்குள் நுழைந்து அவரை அழைத்து சென்றுள்ளமையுடன், அவரைத் தடுத்து வைத்து சித்திரவதை செய்தனர் என்றும் குற்றம்சுமத்திவழக்குத்தாக்கல் செய்வதற்குரெட்ரெஸ்(Redress) என்ற அமைப்பு நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக, மனித உரிமைகள் வழக்கறிஞர் குலசேகரம் (20 ஆம் பக்கம் பார்க்க)

## குளிரூட்டியிலிருந்து வெளியேறிய வாயுவை சுவாசித்த மூவர் மயக்கம்

தனியார் வைத்திய நிலையம் ஒன்றில் மின்பிறப்பாக்கி இயக்கப்பட்ட போது அதிலிருந்தோ அல்லது மின்பிறப்பாக்கியின் மின்சாரத்தில் இயங்கிய குளிரூட்டியிலிருந்தோ வெளியேறிய வாயுவை சுவாசித்த வைத்தியர் உட்பட மூவர் மயக்கமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் நெல்லியடி திருமகள் சோதிவீதியைச்சேர்ந்த பல் வைத்தியரான அருள்பிரகா சம் செந்தில் குமரன் (வயது - 34), வதிரி, கரவெட்டியைச்சேர்ந்தசந்திரலிங்கம் துளசிகா(வயது-20), தொண்டைமானாறைச் சேர்ந்த தர்மலிங்கம் தர்மினி (வயது -26) ஆகியோரே மயக்கமடைந்தனர்.

நேற்றிரவு மின்சாரம் துண்டிக்கப்பட்டபோது மின்பிறப்பாக்கி இயக்கப்பட்டதாகவும் அதன் புகை அறையினுள் பரவியதாகவும் கூறப்படுகிறது. அச்சமயம் குளிரூட்டி ஆழியை இயக்கியபோது அவர்கள் ஒருவித வாயுவை சுவாசித்து மயக்கமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம - 40)

### அளப்பு அருணாசலம்



ஐயா.. ஒண்டுமே விளங்கேல்ல...
நீங்க நல்லவரா? கெட்டவரா?
நீங்க எந்தப் பக்கம்? உள்ளேயா? வெளியேயா...?

## முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு விவகாரம்: விக்னேஸ்வரனின் கருத்தால் மாவை சீற்றம்!

முதலமைச்சர் வேட்பாளர் தெரிவின்போதுமாவைசேனாதிராஜாவுக்குக்கிடைக்கவேண்டிய பதவியைத்தாம்பெறவேண்டியதாயிற்று என்ற சாரப்பட வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறிய கருத்து, மாவை சேனாதிராஜா எம்.பி.யை சீற்றமுற வைத்திருக்கின்றது.

திரும்பத் திரும்ப சிலர் அந்த விடயத்தைப்பேசிக்கொண்டிருக்கின்றார்கள் என்று சீறுகிறார் மாவை சேனாதிராஜா.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற 'காலைக்கதிர்' நாளிதழ் மலர்வின் 'விடியல் வீச்சு' வெளியீட்டின்போது, அந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களுள்ஒருவரானமுதலமைச்சர்விக்னேஸ்வரன் இந்தவிடயம் குறித்துப்பிரஸ்தாபித்திருந்தார்.

'காலைக்கதிர்' நாளிதழின் ஆசிரியராக இப்போது பதவியேற்றிருக்கும் வித்தியாதரன் முன்னர் எதிர்பார்த்திருந்த வடக்கு முதலமைச்சர் பதவி, ஏதோ வகையில் என் மடியில் வந்துவிழுந்தமை அவரை (வித்தியாதரனை) மனதாரப் பாதித்திருக்கும் என்று நான் எண்ணிய போதெல்லாம்எனக்குள்ஒருவித குற்ற உணர்ச்சியை அது ஏற்படுத்தியது - என்று அங்கு உரை (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஆவா குழு வெறும் கப்பம் கோஷ்டியாம்!

### அது விரைவில் அழிக்கப்படும் என்கிறார் பாதுகாப்பு அமைச்சர்

யாழ்ப்பாணத்தில் இயங்குவதாகக் கூறப்படும் ஆவா குழு வெறும் கப்பம் பெறும் கோஷ்டியாகும். அது அப்பாவிப் பொதுமக்களிடம் கப்பம் பெற்றுப் பிழைப்பு நடத்தும் ஒரு குழுவேயன்றி வேறில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

அடுத்து வரும் சில நாள்களில் இந்தக் குழுவின் செயற்பாடுகள் முற்றாக அடக்கப்படும் என்றும் அவர் சூளுரைத்தார்.

பியகமவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகத்துக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

ஆவா குழு என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு பிரிவோ, (20 ஆம் பக்கம் பார்க்க)

## கைதான அறுவர் ஆவா குழுவினரா? அவர்களில் ஒருவர் படைச் சிப்பாய்!

யாழ்ப்பாணம், நவ.07

ஆவா குழுவை சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும். 6 பேரை கொழும்பில் இருந்து வந்த பயங்கரவாதகுற்றத் தடுப்புப் பொலிஸார் யாழ்ப்பாணத்தில் கைது செய்துள்ளனர்.

இதில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரும், தமிழ் அரசியல் கட்சிஒன்றில்அங்கத்துவம் பெற்று செயற்பட்ட ஒருவரும் (20 ஆம் பக்கம் பார்க்க)

# கொல்லப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கு சம்பந்தன் ஆறுதல்

## நியாயம் பெற்றுத்தரப்படும் என்றும் உறுதிமொழி



பொலிஸாரால் படுகொலை செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் வீடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றுச் சனிக்கிழமை நேரில் சென்று பெற்றோருக்கு ஆறுதல் கூறினார்.

நேற்று மதியம் கந்தரோடையில் உள்ள விஜயகுமார் சுலக்சனின் இல்லத்திற்குச் சென்ற சம்பந்தனைக் கண்டதும் சுலக்சனின் தாயாரும் உறவினர்களும் கதறி அழுதனர். சம்பந்தன் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

சுலக்சன் தொடர்பாகவும் அவர் பெற்றோரிடம் கேட்டறிந்து கொண்டார். இந்தப் படுகொலை தொடர்பானவழக்குவிசாரணைகள் நீதியான முறையில் இடம்பெறும் என்று தெரிவித்த சம்பந்தர், நட்டஈடு வழங்குவது தொடர்பாக ஜனாதிபதியுடன் தாம் கலந்துரையாடவுள்ளார் எனக் கூறினார்.

தொடர்ந்து, படுகொலை செய்யப்பட்ட மற்றைய மாணவனான நடராசா கஜனின் கிளிநொச்சியில் உள்ள வீட்டுக்குச் சென்ற சம்பந்தன் பெற்றோரைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

மாணவர்களின் படுகொலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாகக் கூறிய அவர் மாணவர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுப்பதற்கு கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்கும் என்றும் உறுதியளித்தார்.

சுலக்சனின் வீட்டுக்குச் சம்பந்தன் சென்றபோது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், கஜனின் வீட்டுக்குச் சென்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை ஆகியோரும் கூடச்சென்றிருந்தனர். (ம)

## ஓட்டோ - ஹயஸ் விபத்து இளம் பெண் படுகாயம்



யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியிலுள்ள இமையாணன் பகுதியில் முச்சக்கரவண்டியும் ஹயஸ் வான் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த யோகேஸ்வரன் சுதர்சனா (வயது - 28) என்பவரே படுகாயமடைந்தார்.

இவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-09-40)

## கிணற்றில் வீழ்ந்த பெண் உயிரிழப்பு

புத்தூர் கிழக்கு பகுதியில் உள்ள வீட்டுக்கிணறு ஒன்றில் தவறுதலாக வீழ்ந்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

இராஜரத்தினம் விமலாதேவி (வயது - 44) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் ஒரு பிள்ளையின் தாயார் ஆவார்.

இவர் நீர் எடுக்கச் சென்றபோது பாசி சறுக்கியதில் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்தார் என பொலிஸ் விசாரணையின்போது உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற அச்சுவேலிப் பொலிஸார் அங்கு மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (ம - 09).

## நாவற்குழியில் நடமாடும் சேவை

தென்மராட்சி நாவற்குழிப் பகுதியில் பொது மக்களுக்கான நடமாடும் சேவை ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையை சாவகச்சேரி பொலிஸாரும் சாவகச்சேரி பிரதேச சபை நாவற்குழி உப அலுவலகத்தினரும் இணைந்து நாவற்குழி உப அலுவலக பொதுமண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

இந்த நடமாடும் சேவையில் வீதிகளில் பொதுமக்கள் பிரயாணம் செய்யும்போது கடைப்பிடிக்கவேண்டிய முறைகள் தொடர்பான கருத்தரங்கு மற்றும் பொது மக்களது முறைப்பாடுகள், சிரமதானம், பொதுமக்களுக்கான ஆயுள்வேத மருத்துவ முகாம் போன்றவை இடம்பெறவுள்ளன. பொதுமக்கள் கலந்துபயன் பெறுமாறு சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் திருமதி மு.கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார். (இ

## வடமராட்சி கிழக்கில் நேற்று மினிசூறாவளி; ஆலயம் சேதம்

வடமராட்சி,நவ.07

வடமராட்சி கிழக்கு அம்பன் முருகன் கோவில் பகுதியில் நேற்று நண்பகல் 12மணியளவில் திடீரென தாக்கி சுழற்றி அடித்த சூறாவளியால் அக்கோயில் ஓடுகள், கூரைகள் தூக்கி வீசப்பட்டன. கந்தசஷ்டி பாறணைக்காக கோயிலில் குடியிருந்த பக்தர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

மணற்காட்டுப்பகுதியிலிருந்து திடீரென பெரும் மழையுடன் சுழன்று அடித்துக்கொண்டு வந்த சூறாவளியே இந்த அனர்த்தத்தை ஏற்படுத்தியது.

மடப்பள்ளியில் இருந்த பாறணைச் சாப்பாட்டுக்குள்ளும் ஓட்டுத் துகள்கள் விழுந்தன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் பாதிப்புற்ற ஆலயத்துக்கு வருகை தந்து சேதங்களைப் பார்வையிட்டார்.

## தெல்லிப்பழை அம்பனையில் 250 கிராம் கஞ்சா மீட்பு

### - சந்தேக நபர் தப்பியோட்டம் -

தெல்லிப்பழை அம்பனை பகுதியில் கஞ்சாவுடன் நின்றவர் எனக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்வதற்குச் சென்ற பொலிஸார் அந்த நபர் தப்பிச் சென்ற நிலையில் அவர் வீசிவிட்டுச் சென்ற 250 கிராம் கஞ்சாவை மீட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

தெல்லிப்பழை பொலிஸாருக்கு குறித்த நபர் தொடர்பான தகவல்கள் கிடைத்ததையடுத்து அவரைக் கைது செய்வதற்காக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஆர்.றஞ்ஜீத் மாசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் அங்கு விரைந்தனர்.

பொலிஸாரைக் கண்டதும் சந்தேக நபர் மோட்டார் சைக்கிள், கஞ்சா பொதி மேலும் சில பொருட்களைக் கைவிட்டுத் தப்பியோடினார்.

அந்தப் பொருட்களை பொலிஸார் மீட்டு பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

சான்றுப் பொருட்களின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் குறித்த நபர் அரியாலை பூம்புகாரைச் சேர்ந்தவர் என்று கண்டறிந்துள்ளனர்.

அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் கூறப்பட்டது. (ம-09)

## நித்திரைக் கலக்கத்துடன் பயணித்தவர் சங்குப்பிட்டிக் கடலில் வீழ்ந்து படுகாயம்

நித்திரைக் கலக்கத்துடன் சங்குப்பிட்டிப் பாலத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் கடலில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

முழங்காவில் வைத்தியசாலையில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தரான க.மதுபாலன் (வயது 29) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

குறித்த நபர் இரவுநேரக் கடமையை முடித்துவிட்டு காலை 8 மணியளவில் சாவகச்சேரியில் உள்ள வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தார்.

நித்திரைக் கலக்கத்துடன் சங்குப்பிட்டிப் பாலத்தில் அவர் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியமையால், தடுமாறி மோட்டார் சைக்கிளுடன் கடலில் வீழ்ந்தார். இதனால் பலத்த காயங்களுக்கு இலக்கான அவரை மீனவர்கள் மீட்டனர்.

கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். விபத்துக் குறித்து பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## கழிவுத் தேயிலையை ஏற்றுமதி செய்ய முயற்சி

கம்பளை, உடநுவர, கங்கஹத்த பகுதியில் உள்ள களஞ்சியசாலை ஒன்றிலிருந்து 19 ஆயிரம் கிலோகிராம் கழிவுத் தேயிலை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. கம்பளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இத்தேயிலை மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் களஞ்சியசாலையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். (உ-11)

## பூட்டிய அறையிலிருந்து யுவதி சடலமாக மீட்பு

பண்டத்தரிப்பில் உள்ள வீடொன்றின் பூட்டிய அறையில் இருந்து இளம் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேயிடத்தை சேர்ந்த செல்வநாதன் திசாளினி (வயது-21) என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த வீட்டுக்குச் சென்ற இளவாலைப் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ம-09)

## செல்வச்சந்நிதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் சடலம் அடையாளம் காணப்பட்டது

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் சூரன்போர் பார்க்கச் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

இச்சம்பவத்தில் சிறுப்பிட்டி நீர்வேலியைச் சேர்ந்த ஆனந்தகுமார் ஜெயப்பிரகாஸ் (வயது - 14) என்பவரே உயிரிழந்தவராவார்.

செல்வச்சந்நிதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற சூரன்போர் நிகழ்வைப் பார்வையிடுவதற்காக அயல் வீட்டுக்காரருடன் சென்ற மேற்படி சிறுவன் அவர்களுக்கு தெரியாமல் அங்குள்ள நீரேரிக்குச் சென்று நீராடியதாக கூறப்படுகின்றது.

குறித்த சிறுவன் நீராடும்போது நீரில் மூழ்குவதைக் கண்ட அங்கு நின்ற பக்தர்கள் அவரை மீட்டு வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆனாலும் அவர் உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சடலம் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. நேற்றுக் காலையே உறவினர்கள் சென்று அடையாளம் காட்டினர்.

வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்ட பருத்தித்துறை பதில் நீதிவான் பா.சுப்பிரமணியத்தின் உத்தரவின்பேரில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-09-40)



இலங்கை தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி அலுவலகத் திறப்பு விழா நேற்று நடைபெற்ற போது தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சோ. சேனாதிராஜா பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைக்கின்றமையையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா.சம்பந்தன் அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைக்கின்றமையையும் படங்களில் காணலாம்.(ம)

# படுகொலை செய்யப்பட்ட சிங்கள ஊடகவியலாளர்கள் குறித்து விசாரணை; தமிழ் ஊடகவியலாளர்கள் பற்றி மட்டும் பாராமுகம்!

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் விசனம்

'2015 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து அதற்கு முற்பட்ட காலத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் இரண்டு சிங்கள ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பான விசாரணைகளை மட்டும்தான் புதிய அரசாங்கம் மீள் விசாரணைக்கு எடுத்துள்ளது. தமிழ் ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பில் எந்தவிதமான விசாரணையும் இல்லை என்ற நிலைதான் தொடர்கின்றது.'

– இப்படி விசனம் தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

மூத்த ஊடகவியலாளர் வீ.தனபாலசிங்கம் அவர்களுக்கு நேற்று மாலை கரவெட்டி தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கப்பட்டது. அந்த நிகழ்வில் பங்குபற்றி உரையாற்றியபோதே முதலமைச்சர் மேற்கண்டவாறு விசனம் தெரிவித்தார்.

அங்கு அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு :-

சில ஆண்டுகளுக்கு முன்னர் மலேசியாவின் முன்னாள் பிரதமர் மகாதீர் முஹம்மத் அவர்கள் ஓர் அர்த்தமுள்ள கருத்தைத் தெரிவித்திருந்தார் – 'யாருடைய கரங்களில் கப்பல் படை இருந்ததோ அவர்கள்தான் 19ஆம் நூற்றாண்டில் சக்திவாய்ந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். யாருடைய கைகளில் பலமான விமானப் படை இருந்ததோ அவர்கள்தான் 20ஆம் நூற்றாண்டின் பலசாலிகளாகத் திகழ்ந்தார்கள். யாரிடம் ஊடக பலம் இருக்கின்றதோ அவர்கள்தான் 21ஆவது நூற்றாண்டின் சக்தியாகத் திகழ்வார்கள்' என்றார்.

### சக்தி வாய்ந்த ஊடகங்கள்

அதாவது இன்றைய பலமானது பேனாவைச் சென்றடைந்துள்ளது என்பதையே மகதீர் முகம்மது வலியுறுத்தினார். அந்த வகையிலே பேனாபிடித்தவர்கள் பலசாலிகள் ஆகிவிட்டார்கள். எப்பொழுது ஜனநாயகக் கருத்துக்கள் பல நாடுகளையும் ஊடுருவத் தொடங்கியதோ அங்கெல்லாம் பேனாவின் பலம் அதிகரிக்கத்தொடங்கிவிட்டது. ஜனநாயகம் கருத்துறவாடலை மதிக்கின்றது. அதனால்தான் கருத்துக்களைக் காகிதத்தில் வடிக்கின்ற பேனாக்கள் சக்திபெற்று வருகின்றன.

இன்றைய உலகில் ஊடகங்கள் சக்தி வாய்ந்த சாதனங்கள் ஆகியுள்ளன. மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதால் மக்கட்சக்தியானது ஊடகங்கள்பால் மருவி நிற்கின்றது. மக்கள் மத்தியில் கருத்துருவாக்கங்களை மேற்கொள்வதாலும் மக்கள் நிலையறிந்து அவர்தம் எதிர்பார்ப்புக்களை எழுத்தில் பிரதிபலிப்பதாலும் மக்களின் முகவர்களாக ஊடகங்கள் மாறிவருகின்றன. எனவேதான் ஊடகங்களைப் புறக்கணித்துவிட்டு எவரும் எதையுஞ் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் இதன் காரணமாக ஊடகவியலாளர்களுக்குள்ள சமூகப் பொறுப்பும் அதிகரித்திருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும். ஊடகங்கள் சமூகப் பொறுப்புடனும் உண்மைகளை வெளிக்கொண்டு வரும் வகையிலும் செயற்பட வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றன.

இன்று எமது பாராட்டுக்களைப் பெறும் நண்பர் வீரகத்தி தனபாலசிங்கம் அவர்கள் தொடக்கத்தில் இருந்தே சமூகப்பொறுப்புடன் நடந்து வந்த ஓர் ஊடகவியலாளர். எதையும் ஆற அமர சிந்தித்து அமைதியாகத் தமது தொழிலை நடைமுறைப்படுத்தி வந்தவர். அவர் சுமார் நாற்பது வருட கால பத்திரிகைத்துறை



அனுபவம் கொண்டவர். அடிமட்டத்தில் இருந்து மேல்நோக்கி வந்து சாதனைகள் பல புரிந்தவர். ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை நிறுவிய அதே 1977ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதத்தில்தான் தனபாலசிங்கம் அவர்கள் வீரகேசரி பத்திரிகை நிறுவனத்தில் ஒப்புநோக்காளராக இணைந்து கொண்டார். வீரகேசரி அப்பொழுதிருந்த கட்டடமும் இடமும் என் நினைவுக்கு எட்டிய வரையில் ஜே.ஆரின் குடும்பச் சொத்தாகவே அப்போது இருந்தது. அதனால்தான் அவர் அந்த ஆண்டில் அரசாங்கம் அமைத்தமை பற்றி குறிப்பிட்டேன்.

### தனபாலசிங்கத்தின் உயர்வு

படிப்படியாக நண்பர் தனபாலசிங்கம் அவர்கள் பதவி உயர்வுகள் பெற்றார். 85ஆம் ஆண்டில் உதவி ஆசிரியர் ஆனார். 13 வருடங்கள் அந்த ஆசிரிய பீடத்தில் இருந்து வெவ்வேறு பணிகளில் திறம்பட ஈடுபட்டு வந்தார்.

ஆயிரத்தித் தொழாயிரத்துத் தொண்ணூற்று ஏழாம் ஆண்டிதான் தினக்குரல் பத்திரிகை ஆரம்பமானது. காலஞ்சென்ற பொன் இராஜகோபால், நண்பர் சிவநேசச்செல்வன் ஆகியோருடன் சேர்ந்து தினக்குரலின் முதல் செய்தி ஆசிரியராக அப்போது தனபாலசிங்கம் பொறுப்பேற்றார். 2004ஆம் ஆண்டில் தினக்குரலின் பிரதம ஆசிரியரானார். அந்தக் கால கட்டத்தில்தான் எனக்கு நண்பர் தனபாலசிங்கம் அவர்களைத் தெரிய வந்தது. அவரின் அறிவுக்கூர்மையும் நுட்பமும் அவரின் ஆசிரிய தலையங்கங்களில் 'பளிச்' செனத் தெரிவதாய் இருந்தன.

ஏழு வருடங்களின் பின்னர் 2011ஆம் ஆண்டு தொடக்கம் அவர் ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன் சிரேஷ்ட பத்திரிகையாளராகப் பணிபுரிந்துகொண்டிருக்கின்றார். அவரின் ஆசிரியதலையங்கங்கள் தொகுப்பு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

### இவர் ஜனாதிபதியின் நண்பரா?

நான் அவரிடம் கேட்காத ஒரு கேள்வி உண்டு. எமது மாண்புமிகு ஜனாதிபதி அவர்களும் தனபாலசிங்கம் அவர்களும் கம்யூனிஸ்ட் தலைவர் சண்முகதாசனுடன் நெருக்கமான தொடர்பு வைத்துக்கொண்டிருந்தவர்கள். எனவே இருவரும் அப்பொழுதிருந்தே ஒருவரை ஒருவர் தெரிந்து வைத்திருந்தார்களா இல்லையா என்பதே கேள்வி. அண்மையில்தான், 1971ஆம் ஆண்டளவில் தான் சிறைக்குப் போனது பற்றி ஜனாதிபதி அவர்கள் எமக்குக் கூறினார். அவரும் அந்த நாள்களில் பீகிங் அலகின் கம்யூனிஸத்திலேயே ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அதேபோன்று நண்பர் தனபாலசிங்கம் அவர்கள் இடதுசாரி இயக்க ஈடுபாட்டைப்பற்றியும் அது தமக்குத் தந்த வழிகாட்டல்கள் பற்றியும் பலமுறை குறிப்பிட்டுள்ளார். அந்த வழிகாட்டல்களே பத்திரிகைத் துறையில்



தம்மை சமூகப் பிரக்ஞையுடன் பயனுறுதியுடன் தனது பணியைச் செவ்வனே செய்ய வைத்தன என்றும் கூறியுள்ளார். எனவே ஜனாதிபதி அவர்களும் தனபாலசிங்கம் அவர்களும் அன்றிலிருந்தே ஒருவரையொருவர் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்களேயானால் நாங்கள் ஜனாதிபதியை தன பாலசிங்கம் ஊடகச் சந்திக்கலாம் என்ற நப்பாசைதான்!

இவரது 'ஊருக்கு நல்லது சொல்வேன்' நூலுக்கு ஐந்து வருடங்களுக்கு முன் தமிழ்நாடு நாமக்கல் சின்னப்பபாரதி விருது கிடைத்தது. இவ்வருடம் மே மாதத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரமும், பத்திரிகை ஆசிரியர்கள் அமைப்பும் சேர்ந்து இவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கியுள்ளன.

தான் செய்யும் தொழிலின் உச்சக்கட்டத்தை ஒருவர் அடைந்தால்தான் அவர் வாழ்நாள் சாதனையாளர் என்ற பெருமையைப்பெறலாம். அந்தவிதத்தில் படிப்படியாக ஏறி தனது பயணத்தின் உச்சக்கட்டத்தை நண்பர் தனபாலசிங்கம் அவர்கள் அடைந்திருக்கின்றமை எமக்கெல்லாம் பெருமை தரும் விடயம். அவருக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

### எது பிராந்தியப் பத்திரிகை?

நேற்றையதினம் நண்பர் தனபாலசிங்கம் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார். யாழ்ப்பாணத்திலிருந்துதான் பிராந்தியப் பத்திரிகைகள் வெற்றிகரமாக வெளிவந்திருக்கின்றன என்ற கருத்தை அவர் ஏற்கவில்லை. பிராந்தியச் செய்திகள் மட்டுமல்லாது உலகச் செய்திகளையும் அவை உள்ளடக்கியுள்ளமையால் அவை பிராந்தியப் பத்திரிகைகள் மட்டும் அல்ல என்றார். பத்திரிகைகளின் உற்பத்தி அல்லது ஜனனம் எங்கிருந்து தொடங்கியது என்பதை வைத்தே அவற்றைப் பிராந்தியப் பத்திரிகைகள் என்று அழைத்து வந்துள்ளோம். தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்துடன் இணைந்ததாகவே மேற்படி பிராந்தியப் பத்திரிகைகளின் ஜனனமும் வளர்ச்சியும் இருந்தன. 1960களில் யாழ்ப்பாணத்தில் வெடித்த சத்தியாக்கிரகப் போராட்டம்தான் ஈழநாடு பத்திரிகையின் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தது. அன்றைய அஹிம்சைப்போராட்டமே காலக்கிரமத்தில் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறியது. மாற்றமடைந்த 1980களின் நடுப்பகுதியில் மேலும் இரு பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தில் உதயமாகின. அதில் ஒன்றுதான் உதயன். 1985இல் உதயமானது. ஜனநாயக ரீதியாக இராஜதந்திர மட்டத்திற்கு எமது போராட்டம் நகர்ந்துள்ள பின்னணியில் நேற்றுத் தொடக்கம் 'காலைக்கதிர்' வெளிவரத் தொடங்கியுள்ளது. பத்திரிகைகளின் உள்ளடக்கத்தை வைத்துப் பார்த்தால் இவை பிராந்தியப்பத்திரிகைகள் அல்ல என்று கூறலாம். ஆனால் அவற்றின் பின்னணி, குறிக்கோள், உற்பத்தி மூலம் என்பனவற்றை வைத்துப் பார்த்தால் அவை பிராந்தியப்பத்திரிகைகளே என்று எனக்குப்படுகின்றது.

### ஊடகங்களின் முக்கிய பங்கு

இன்றையகாலகட்டத்தில் ஊடகங்களின் பங்கு முக்கியமானது. நேரடியான யுத்தம் ஒன்று இல்லாவிட்டாலும், மறைமுகமான யுத்தம் ஒன்றை, ஒடுக்குமுறை ஒன்றை நாம் எதிர்கொள்கின்றோம். ஒரு காலத்தில் ஈழம் தவிர்ந்த எல்லாம் தரலாம் என முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ அடிக்கடி சொல்வார். ஆனால், எதனையும் தர அவர் தயாராக இருக்கவில்லை. இப்போதும் அதேபோன்ற ஒரு நிலைதான் காணப்படுகின்றது. எல்லாம் திறந்துவிடப்பட்டுள்ளன என்பது போன்ற ஒரு தோற்றப்பாடு காண்பிக்கப்பட்டாலுங்கூட, மறைமுகமான அழுத்தங்களும் ஒடுக்குமுறைகளும் தொடரத்தான் செய்கின்றன. ஒரு இலட்சத்துக்கும் அதிகமான படையினரை வடபகுதியில் வைத்துக்கொண்டு மக்கள் எவ்வாறு சுதந்திரமாக நடமாட முடியும்? எப்படித் தொழில் செய்ய முடியும்? இது போன்ற பல்வேறு நெருக்கடிகள் எம் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் திணிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு ஒரு நீண்ட வரலாறு உள்ளது. பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்களுடைய குரலாக அவை ஒலித்திருக்கின்றன. இதற்காக அந்தப் பத்திரிகை நிறுவனங்கள் சந்தித்த நெருக்கடிகள் பல. யாழ்ப்பாணம் யோகர்சுவாமிகள் சில தசாப்தங்களுக்கு முன்னர் சொன்னார்: "ஏசுவார்கள், எரிப்பார்கள். உண்மையை எழுதுங்கள், உண்மையாக எழுதுங்கள்" என. அவரது தீர்க்கதரிசனம் உண்மையாகவே இருந்தது. அடக்குமுறைகளுக்கு மத்தியிலும், தமிழ்ப் பத்திரிகைகள் தமது பத்திரிகா தர்மத்தைக் கைவிடவில்லை. தாம் சார்ந்த மக்களின் குரலாகவே அவை எப்போதும் ஒலித்தன. அதற்காகக் கொடுக்கப்பட்ட விலையும் அதிகம்தான். போரின் போதான தன்னுடைய காலத்தில் தனபாலசிங்கம் அவர்களும் தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கத் தவறவில்லை.

(19 ஆம் பக்கம் பார்க்க)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600


## விக்கியின் கோரிக்கை நியாயமே!

இலங்கைத் தமிழர் அரசியலில் அண்மைக்காலமாக, வெளியே தெரியாமல் உள்ளோட்டமாக நிலவிவந்த ஒரு பதற்றத்துக்கு முக்கிய இரு தலைவர்கள் ஒன்றிணைந்து தற்காலிகமாகவேனும் ஒரு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றார்கள்.

சரியோ, பிழையோ - விரும்பியோ, விரும்பாமலோ - இலங்கைத் தமிழர்கள் தரப்பில், குறிப்பாக வடக்கு, கிழக்குத் தமிழர்களின் சார்பில், மூத்த இரு தலைவர்களாக மதிக்கப்படுபவர்கள் - மதிக்கப்படும் தகுதி நிலையில் இருப்பவர்கள் தான் - இரா.சம்பந்தனும், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும்.

இலங்கைத் தமிழர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளாக - உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் இன்று மதிக்கப்படுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் இவர்களே.

ஒருவர் இன்று எதிர்க்கட்சித் தலைவர். மற்றையவர் ஓய்வு பெற்ற நீதியரசர். இருவருமே வயதில் மூத்தவர்கள். ஒருவர் பழுத்த அரசியல்வாதி. மற்றையவர் தேர்தல் அரசியலுக்குப் புதியவர் என்றாலும், அவரும் அரசியல் துறை விடயங்களில் விற்பன்னர்தான். அவர்கள் இருவரினதும் அரசியல் முதிர்ச்சி ஆழமானது. அதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

அத்தகைய இருவர் தலைமையிலும் தமிழர் தரப்பு கன்னை பிரியுமோ என்ற அச்சம் அண்மைக் காலமாகத் தமிழரின் நலன் விரும்பிகள் மட்டத்தில் நிலவி வந்தது என்பது உண்மை. அதனால் தமிழர் தரப்பில், வெளியே தெரியாமல் - உள்ளோட்டமாக - ஓர் அரசியல் பதற்றம் நிலவிவந்தது என்பதும் மறுக்கப்பட அல்லது மறைக்கப்பட முடியாத நிஜம். அந்தப் பதற்றம் இப்போது தற்காலிகமாக வேனும் முடிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

"வடக்கு மாகாணசபைக்கு விக்னேஸ்வரனை முதலமைச்சராக்குவதற்கு அன்று நாங்கள் எடுத்த முடிவு இன்றும் சரியானதுதான் என நான் கருதுகிறேன்" - என்று அறிவித்தமையின் மூலம், முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீதான தனது முழு நம்பிக்கை இன்றும் - இன்னும் - முழு அளவில் தொடருகின்றது என்பதை அவரை முன்னால் வைத்துக் கொண்டே பகிரங்கப்படுத்தி இருக்கின்றார் சம்பந்தன் ஐயா.

அதேபோல, தமிழ்க் கூட்டமைப்பை உடைக்கவே மாட்டேன் என்று சம்பந்தன் ஐயா முன்னிலையில் திட்டவட்டமாகவும் - தெளிவாகவும் - ஐயந்திரிபறவும் - பிரகடனப்படுத்தியதன் வாயிலாக, கூட்டமைப்பை உடைக்கும் கனவில் காத்திருந்த பலருக்கும் ஒரேயடியாக ஆப்பு வைத்திருக்கின்றார் நீதியரசர்.

அதேசமயம், அண்மைக் காலமாகத் தாம் வெளியிட்டு வந்த சில கருத்துக்களுக்குப் பின்னால் புதைந்திருக்கும் நியாயமான சில காரணிகளையும் நீதியரசர் விக்னேஸ்வரன், சம்பந்தன் ஐயா முன்னிலையில் வெளிப்படுத்தியமையும் மிக முக்கியமான அம்சமாகும்.

"என்னால் தமிழ்க் கூட்டமைப்பின் ஒற்றுமை சீர்குலைந்து போகக்கூடும் என்ற கருத்து பத்திரிகைகளில் மேலும் மேலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இது சிலரின் தனிப்பட்ட கருத்தாக இருக்கலாம்; அல்லது, தனிப்பட்டவர்களின் அரசியலின் பிரதிபலிப்பாக இருக்கலாம்" - என்று வெளிப்படையாக உரையாற்றிய முதல்வர், கூட்டமைப்பை உடைத்தெறிய வேண்டிய தேவை தமக்கு இல்லவே இல்லை என்பதையும் ஆணித்தரமாகப் புட்டு வைத்திருக்கிறார்.

"என் கருத்துக்களில் வலு இருக்கின்றதா என்பதைக் கூட்டமைப்பினர் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கிருக்கின்றமை என்பது உண்மைதான்" - எனச் சுட்டிக்காட்டும் முதல்வர், அந்த எதிர்பார்ப்பு ஜனநாயக விழுமியங்களுக்கு உட்பட்டது என்பதையும் சம்பந்தன் ஐயா முன்னிலையில் தெளிவுபடுத்தி உள்ளார்.

"அத்தகைய ஆரோக்கிய முரண்பாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம் இருப்பதால்தான் அந்த அமைப்பு ஓர் உயிரோட்டம் நிறைந்த ஜனநாயகக் கட்டமைப்பாக இருக்கின்றது" - என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இதன்மூலம் இனியும் எதிர்காலத்திலும் தமிழ்க் கூட்டமைப்பு ஓர் ஆரோக்கியமான ஜனநாயகக் கட்டமைப் பாக இயங்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் அதற்கு எது அவசியம் என்பதையும் கூட அவர் எடுத்தியம்பி உள்ளார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் போன்ற மூத்த தலைவர்கள் தமிழ்க் கூட்டமைப்பின் கொள்கைப்போக்கு மற்றும் நிலைப்பாடுகள் தொடர்பாக முன்வைக்கும் மாற்றுக் கருத்துக்கள், சிந்தனைகள் குறித்து கூட்டமைப்புக்குள்ளும் வெளியிலும், ஆய்வுக்கு - உள்ளக உசாவலுக்கு - கூட்டமைப்பு தயாராக இருக்க வேண்டும். அதுவே அந்தக் கூட்டமைப்பைச் செழுமைப்படுத்தி, அதனை உண்மையான மக்கள் இயக்கமாக மாற்றும்.

தலைவர் சம்பந்தன் முன்னால் அவரது முக்கிய பிரதானிகளுள் ஒருவரான முதல்வர் விக்னேஸ்வரன் வைத்த இந்தக் கோரிக்கையை அவர் சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் கூட்டமைப்பு உண்மையான ஜனநாயக இயக்கமாக மாறும்; அதன் பலம் வலுக்கும். அதன் மூலமே தமிழர் வளம் பெறுவர்.

அதே சமயம் கூட்டமைப்புக் குறித்து பலரும் அதிருப்தியுடன் சுட்டிக்காட்டும் ஒரு விடயத்தையே - உட்கட்சி ஜனநாயகம் உயிரோட்டமாக கூட்டமைப்புக்குள் இல்லை என்பதையே - முதல்வர் விக்னேஸ்வரன் தமக்கே உரித்தான அரசியல் முதிர்சியுடன் வேறு வார்த்தைகளில் கூறுகிறார் என்பதும் கவனிக்கத்தக்கது.

# இந்திய மீனவர்களால் தொடரும் பட்டினிச் சாவு

## வடக்கு மீனவர் பிரதிநிதிகள் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், நவ.07

கடந்த காலத்தில் நடைபெற்ற போரின் போது நாம் குண்டுகளால் அடிபட்டுச் சாவை எதிர்கொண்டோம். இன்று இந்திய மீனவர்களின் அத்து மீறல்களால் பட்டினிச்சாவை எதிர்கொள்கிறோம்.

இந்திய மீனவர்கள் அத்து மீறும் போது படகுகள் பறிமுதல் செய்யப்படும். இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு மேலும் கால அவகாசம் தரப்பட மாட்டாது.

இவ்வாறு வடக்கு மீனவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தியா - புதுடில்லியில் இந்திய மீனவர்களுடன் இடம்பெற்ற பேச்சு தொடர்பாக ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய மீனவர்களால் வடபகுதியில் கடல்வளம் அடியோடு சுரண்டப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதனால் எமது மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

யுத்த காலத்தில் குண்டுகளால் பாதிக்கப்பட்ட எமது மீனவர்கள் தற்போது இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்திய மீனவர்கள் பேச்சின் போது, வடபகுதியில் மீன்பிடியில் ஈடுபடுவதை நிறுத்த மூன்று வருட காலம் அவகாசம் கேட்டிருந்தனர். இவ்வாறான அவகாசங்களை வழங்க முடியாது என்று நாம் தெரிவித்தோம்.

கடந்த காலங்களில் நடைபெற்ற இவ்வாறான பேச்சுகளின் போது அவகாசங்களைக் கேட்டு இப் பேச்சுகள் செயலற்றுப் போவதற்கும் முயன்றிருந்தார்கள். நாம் அதற்கு இடமளிக்கவில்லை.

இந்திய மீனவர்கள் வடபகுதிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதால் யுத்தத்தாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட வடக்கு மீனவர்கள் கடந்த 5 வருடங்களாக நிம்மதியாக மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர்.- என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் அந்தோனிப்பிள்ளை காயராசா, பூநகரி கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் யோசப் பிரான்சிஸ் மற்றும் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் மீனவர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(ஐ-10-12)

# தனுஷ்கோடியில் மீன் பிடித்த இலங்கையர் மூவருக்குச் சிறை

சென்னை, நவ.07

தனுஷ்கோடி கடலில் மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் மூவருக்கு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை இராமநாதபுரம் நீதிமன்றம் காவல் நீடிப்பு செய்துள்ளது.

இலங்கை மீனவர்களான தேவநேசன் (வயது 26), அவரது சகோதரன் அருள்நேசன் (வயது 25), தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த விஜி (வயது 25) ஆகியோர் ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி இரவு தனுஷ்கோடி கடல் அரிச்சல்முனை முதலாம் தீடையில் விசைப்படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில், அந்தப் பகுதிக்கு ரோந்து சென்ற மண்டபம் மரைன் பொலிஸார் மூவரையும் கைதுசெய்து இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

நீதிபதி ஜெயராஜன் உத்தரவுப்படி 15 நாள்கள் காவலில் சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் நடந்தது. இதன்போது நீதிமன்றத்தில் இலங்கை மீனவர்கள் மூவரும் ஆஜர்படுத்தப்பட்டனர். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், இவர்களுடைய சிறைக் காவலை நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை நீடித்துத் தீர்ப்பளித்தார். இதையடுத்து அவர்கள் பாதுகாப்புடன் புழல் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

காரைக்கால் மீனவர்களை இலங்கை அரசு விடுவித்த நிலையில், இலங்கை மீனவர்களை விரைவில் விடுவிக்க மத்திய அரசு உத்தரவிடலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.(ஐ)

# மாகாண ஆளுநர்களுக்கும் வாகன இறக்குமதி அனுமதி

இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் வைத்தியர்கள் மற்றும் அரச உயரதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டு வந்த வரியில்லா வாகன இறக்குமதிச் சலுகை இனிமேல் மாகாண ஆளுநர்களுக்கும் கிடைக்கவிருக்கின்றது.

ஆளுநர் பதவியை இரண்டு வருடம் பூர்த்தி செய்தவர்களுக்கு வரி இல்லாத வாகன இறக்குமதிக்கு அனுமதி அளிக்கும் தீர்மானத்தை அமைச்சரவை எடுத்திருக்கின்றது.

நல்லாட்சி அரசின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு இன்னும் சில தினங்களே இருக்கையில் இந்தத் தீர்மானத்தை அமைச்சரவை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## நினைவுப் பேருரை

சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் வி.சிவசுப்பிரமணியத்தின் 20 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை, நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு, கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் நடைபெறும். 'பாடசாலைக்கான தலைமைத்துவம்' என்ற தலைப்பிலான நினைவுப் பேருரையை பேராசிரியர் க.தேவராஜா வழங்குவார். வைத்தியர் எஸ்.சிவானந்தராஜா நிறைவுரை நிகழ்த்துவார். (இ)

## நாளை

08.11.2016
செவ்வாய்க்கிழமை
திதி : அட்டமி மு.ப 8.33 வரை
நட்சத்திரம் : அவிட்டம்
பி.இ. 12.28 வரை
சுபநேரம் 10.35 – 12.05
இராகுகாலம் 3.05 – 4.35

# முல்லை. ஒட்டுசுட்டானில் கல் அகழ்வு, காடு அழிப்பு

### தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை



வடக்கில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற காடழிப்பு மற்றும் மண் அகழ்வு காரணமாக மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துமாறு அவர்கள் அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

குறிப்பாக, முல்லைத்தீவு ஒட்டு சுட்டான்சின்னச்சாளம்பன் பகுதியில் அனுமதிகளுக்கு முரணான வகையில் கல் அகழ்வு இடம்பெற்றுவருகின்றது. மேலும் காட்டுமரங்களும்அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் இதுவரை மேலே துருத்திக்கொண்டு நின்ற கருங்கற்கள் வெட்டி எடுக்கப்பட்ட நிலையில்தற்போது ஆழமான குழிகள் வெட்டப்பட்டு கல் அகழப்படுகின்றது. இங்குள்ள காடுகளுக்குள்அத்துமீறிநுழைபவர்கள் பெரும் மரங்களை வெட்டிச் செல்கின்றனர்.

இந்தச் செயற்பாடுகளால் குறித்த பிரதேச மக்களும்அயல் பிரதேசங்களில் வசிக்கும் மக்களும் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, ஒட்டுசுட்டானில் கல் அகழ்வுக்கு அனுமதி வழங்கிய அதிகாரிகள் குறித்த இடத்திற்கு நேரில்சென்று பார்வையிட்டுமக்கள் நலன் கருதி இந்தச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

காட்டு மரங்களை வெட்டிச் செல்பவர்களையும் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

# கல்வி நிர்வாக சேவைக்கு 852 பேரை இணைக்க முடிவு

கொழும்பு, நவ.07

இந்த வருடம் முடிவதற்கு முன்னர்கல்விநிர்வாகசேவைக்குத் தகுதியான 852 பேரை இணைத்துக்கொள்ள கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

திறந்தபோட்டிப்பரீட்சைக்குத் தோற்றியவிண்ணப்பதாரிகளில் இருந்து 219 பேரும், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் 515 பேரும், சிரேஷ்ட மற்றும் தகுதி அடிப்படையில் 118 பேரும் இவ்வாறு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

திறந்த போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடத்தப்படவுள்ளது என்று அமைச்சு மேலும் கூறியுள்ளது. (ஐ)

# இளையோரிடையே ஓட்டோ பாவனை தடுக்க அரசு விரைவில் நடவடிக்கை

இளைஞர்கள் ஓட்டோ சாரதிகளாக செயற்படுவதைத் தடுக்கும் வகையிலான யோசனைகள் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன என்று அரச தகவல்கள் தெரிவித்துள்ளன.

35 வயதுக்குக் குறைந்தவர்கள் ஓட்டோ சாரதிகளாக வர முடியாதவாறு இந்த சட்டங்கள் அமையவுள்ளன.

அத்துடன், வீட்டுப்பாவனைக்குப் பயன்படுத்தப்படும் ஓட்டோ மற்றும் வாடகைக்கு செல்லும் ஓட்டோஎன்பவற்றைவகைப்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இளைஞர்கள் ஓட்டோ சாரதிகளாக மாறும் நிலைமை அதிகரித்து வருவதாக சமூகத்திலிருந்து முறைப்பாடுகள்பலகிடைக்கப் பெற்றுள்ளன. இதனைத் தடுக்கும்நோக்குடன் இந்ததீர்மானத்தைநடைமுறைப்படுத்தஅரசு நடவடிக்கைஎடுத்துள்ளதுஎன்று அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அண்மையில் 17ஓட்டோசங்கங்கள்இணைந்து, இளையோரிடையே ஓட்டோ பாவனை அதிகரித்துள்ளனஎன்றும் அதனால் பெரும் நெருக்கடிகள், விபத்துகள் இடம்பெறுகின்றன என்றும் சுட்டிக்காட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயம்

காரைநகர்–பொன்னாலைப் பாலத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தின் போது இளைஞர் ஒருவர் காயமடைந்தார். காரைநகர் பழைய கண்டியைச் சேர்ந்த தி.ஜீவகுமார் (வயது -32) என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.

நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் காரைநகருக்குச் சென்ற இளைஞரின் மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டைஇழந்துபாலத்தில் விபத்துக்குள்ளாகியது.

இதன்போது காயமடைந்த மேற்படி இளைஞர் வீதியால் போக்குவரத்துச் செய்தோரால் மீட்கப்பட்டு காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார். (ம -65)

# நாவற்குழியில் மூத்தோர் கௌரவிப்பு

நாவற்குழி, நவ.07

நாவற்குழி கிழக்கு அமரர் வைரமுத்து சரவணமுத்து நினைவாககந்தையா கனகம்மா – நிதியமும், அமரர் வைரமுத்து சரவணமுத்து குடும்பத்தினரும் இணைந்து மூத்தோரைக் கௌரவிக்கும் விழா நாளை மறுதினம்புதன்கிழமைபிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை நாவற்குழி உப அலுவலக கந்தையா கனகம்மா நினைவாலயபொதுமண்டபத்தில்நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு ஓய்வுபெற்ற அதிபர், திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மறவன்புலோ க.சச்சிதானந்தமும் சிறப்பு விருந்தினர்களாக சம்பத் வங்கி யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளர் இ.குமணன், சட்டத் தரணி நி.கேசாந், பொது சுகாதாரபரிசோதகர்கா.சிவனேசகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபைஉபஅலுவலகபொறுப்பதிகாரிநா.தங்கவேலும்கலந்து கொள் வர். (இ

# ஸ்ரீல.சு.கவிலிருந்து பீரிஸ் நீக்கம்

முன்னாள் அமைச்சரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசியர் ஜீ.எல். பீரிஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கட்சியில் அவரது அடிப்படை உறுப்புரிமைநீக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்ததிஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராக பேராசியரியர் ஜீ.எல்.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டமையை அடுத்தே ஸ்ரீல.சு.கட்சியிலிருந்து அவர் விலக்கப்பட்டிருக்கின்றார்.

# காணி,பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்குங்கள்!

### புதிய அரசமைப்பிடம் பிரேரணை முன்வைப்பு

காணி,பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்குமாறும், மாகாணசபைகளைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தை மட்டுப்படுத்துமாறும் தெரிவிக்கும் பிரேரணையொன்று புதிய அரசமைப்புக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான பிரேரணைகளை முன்வைப்பதற்கு நியமிக்கப்பட்ட ஆறு உப குழுக்களில்ஒருகுழுவால்இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு உருவாக்கக் குழுவின் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்கிரமரத்னவின் ஆலோசனையின்பேரில்இந்தக் குழு செயற்படுகின்றது.

மத்திய அரசு, மாகாண சபை மற்றும் பிரதேச சபை போன்ற அரசமைப்புகளிடையே அதிகாரப் பகிர்வு தொடர்பில் முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு இந்த உபகுழுவுக்குபொறுப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றமைகுறிப்பிடத்தக்கது. (ஐ)

### வட்டு. இந்து வாலிபர் சங்க ஏற்பாட்டில்

# முல்லை மாணவருக்கு சைக்கிள்கள் வழங்கல்



முல்லைத்தீவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள 32 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.அமராபெண்கள் அமைப்பில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கே இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

பிரித்தானிய தொண்டு நிறுவனமான 'எதிர்காலத்திற்கான பாதை'அமைப்பு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திற்கு ஊடாக இந்த சைக்கிள்களை வழங்கியது.

புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்திலுள்ள இனிய வாழ்வு இல்லத்தில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

பிரித்தானிய தொண்டு நிறுவனமான மேற்படி அமைப்பு எதிர்காலத்தில் முல்லைத்தீவிலுள்ள மக்களுக்கும் மாணவர்களுக்கும் பல்வேறு உதவித்திட்டங்களை வழங்கவிருப்பதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை, லண்டன் ஓம் சரவணபாபா சேவா அறக்கட்டளைநிதியத்தால் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்துக்கு ஊடாக கடந்த மாதம் 37 சைக்கிள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# போலி நாணயத்தாள் கொடுத்து மது வாங்க முயன்றோர் கைது

### மட்டு. களுவாஞ்சிக்குடியில் நேற்று சம்பவம்

மட்டக்களப்பு–களுவாஞ்சிகுடி பிரதான வீதியில் அமைந்துள்ள மதுபானசாலை ஒன்றில் போலி நாணயத்தாளுடன் மதுபான கொள்வனவுக்குச் சென்ற இருவர் மடக்கிப்பிடிக்கப்பட்டனர். இந்தச்சம்பவம்நேற்று மதியம் இடம்பெற்றது.

இவர்கள் கடந்த பல மாதங்களாக தங்கள் மதுபான நிலையத்துக்கு வந்து போலி நாணயத்தாளைக் கொடுத்து மதுபானம் பெற்றுச் சென்றனர் என்றும்நேற்றுதாங்கள்மிகுந்த அவதானத்துடன் இருந்து அவர்களைக் கைது செய்தனர் எனவும் குறித்த மதுபான நிலைய உரிமையாளர் தெரிவித்தார்.

இதுவரை தாங்கள் 20 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட கள்ள நோட்டுக்களைக் கிழித்து எறிந்ததாகவும் இந்தப் படிப்பினை காரணமாகவே தாங்கள் அவதானமாக இருந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

இதுதொடர்பாகஅவர்மேலும் தெரிவிக்கையில் –

வழமைபோன்று வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தோம். முச்சக்கரவண்டியில் மூவர் வந்தனர். அதில் இரண்டு பேர் இறங்கிவந்து 5000 ரூபாய் நாணயத்தாள் ஒன்றினை தந்து மதுபானம் கேட்டனர்.

அந்த நாணயத் தாளில் எமக்கு சந்தேகம் ஏற்பட்டது, பரிசோதித்தோம். அது போலிநாணயத்தாள் என்பது தெரியவந்தது. இதன்போது இருவரும் ஓட முயன்றனர். அவர்களைமடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தோம். பிடிக்கப்பட்ட இருவரும் காத்தான்குடியைச் சோர்ந்த இருபத்தைந்து வயது மதிக்கத் தக்கவர்கள். – என்றார்.

இதேவேளை, தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுக்கப் பட்டுவருவதாக களுவாஞ்சிக்குடி பொலிசார் தெரிவித்தனர். (ம)

# பிரிட்டன் விசா நடைமுறையில் அதிரடியாக சில மாற்றங்கள்

## அந்நாட்டு உள்துறை அலுவலகம் அறிவிப்பு

லண்டன், நவ.07

பிரித்தானியாவில் விசா நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் இந்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் இங்கிலாந்து உள்துறை அலுவலகம் அறிவித்துள்ளது.

பிரித்தானியா அதிரடியாக ஏற்படுத்தியிருக்கும் இந்த மாற்றங்கள் காரணமாக இனி அங்கு செல்லுவோர் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பிரிட்டனில் குடியேறும் ஐரோப்பிய யூனியனில் அல்லாத மற்ற நாட்டவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காகவே இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என இங்கிலாந்து உள்துறை அலுவலகம் கடந்த வியாழக்கிழமை இரவு அறிவித்துள்ளது.

இதற்கமைவாக பிரிட்டனில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் தங்கள் பெற்றோருக்கோ அல்லது மனைவிக்கோ நிரந்தர குடியுரிமை விசா கேட்டு விண்ணப்பிக்க இரண்டரை ஆண்டுகாலம் அங்கு தங்கியிருக்க வேண்டும் என்று இதுவரை இருந்த விதிமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இனிமேல் ஐந்து ஆண்டுகள் தங்கியிருந்த பின்னரே நிரந்தர குடியுரிமை விசா கேட்டு விண்ணப்பிக்க முடியும்.

நிறுவனங்களுக்கு ஊடாக ஊழியர்களை இடமாற்றம் செய்து கொள்ளும் (ஐ.சி.டி) பிரிவில் விசா பெற விண்ணப்பிப்பவர்களின் மாதச் சம்பளம் ரூ. 1.75 இலட்சத்தில் இருந்து ரூ. 2.5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

டயர் - 2 பொதுப் பிரிவில் அனுபவமிக்க பணியாளர்களின் சம்பளம் ரூ. 2 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பளத் தொகை அதிகரிப்பால் அதற்கு கீழ் வருமானத்தைப் பெறுபவர்களால் பிரிட்டன் விசாகேட்டு விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ம)

# பிரதமருக்கு எதிராக பிரேரணையா? அப்படி வந்தால் தோற்கடிப்போம்

## ஐ.தே. கட்சி தெரிவிப்பு



கொழும்பு, நவ.07

பிரதமர் ரணில் விக்கிரசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தால் அது மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேற்பட்ட வாக்குகளால் தோற்கடிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறிப்பத்திர கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கோப் குழுவின் அறிக்கையில் பிரதமர் பொறுப்புக் கூறவேண்டும் என்று ஓரிடத்திலும் கூறப்பட்டிருக்கவில்லை.

அப்படி இருக்கும் போது கூட்டு எதிர்க்கட்சி பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரப்போவதாக கூறி மக்களைத் தவறாக வழிநடத்த முயற்சித்து வருகின்றது.

இது கூட்டு எதிர்க்கட்சியின் அரசியல் வங்குரோத்து நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது என்றும் ஐக்கிய தேசியக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, பிரதமர் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுமாயின் அதனைத் தோற்கடிப்பது என அமைச்சரவை ஏகமனதாக தீமானித்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (இ,ம)

# அங்கவீனமுற்ற படையினரின் உரிமைக்காக பாதயாத்திரை!

## இராவணா பலய ஏற்பாட்டில்

கொழும்பு, நவ.07

அங்கவீனமுற்ற இராணுவத்தினரின் உரிமைக்காக இன்று காலிமுகத்திடலில் இருந்து பெருமெடுப்பில் பாதயாத்திரை நடத்தப்படவுள்ளதாக இராவணா பலய தெரிவித்துள்ளது.

பொலிஸார் முடியுமானால் இந்தப் பாத யாத்திரையைத் தடுத்து நிறுத்தட்டும் பார்க்கலாம் என்றும் அந்த அமைப்புச் சவால் விடுத்துள்ளது.

12 வருட சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஓய்வுபெற்ற அங்கவீனமுற்ற, இராணுவத்தினர் தமக்கு ஓய்வூதியம் தருமாறு கோரிக்கை விடுத்து கடந்த 31 ஆம் திகதி முதல் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்தப் போராட்டத்தைப் பார்வையிடுவதற்காக இராவணாபலய அமைப்பின் ஏற்பாட்டாளர் இத்தா கந்தே சத்தாதிஸ்ஸ தேரர் கடந்த வெள்ளிக்கிழமை அங்கு சென்றார். அங்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு சவால் விடுத்தார். (இ-ம)

# நாட்டில் அதிக மழைக்கு இப்போது வாய்ப்பு இல்லை

கொழும்பு, நவ.07

மத்திய வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் தற்பொழுது இலங்கையின் வடகிழக்கிலிருந்து 900 கிலோமீற்றரில் மையங் கொண்டுள்ளதால் பெரு மழை பெய்வதற்கான சாத்தியங்கள் இல்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், நாட்டில் பல பிரதேசங்களில் அவ்வப்போது மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். வானம் தொடர்ச்சியாக மேக மூட்டத்துடன் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை பெற்றுக்கொள்ள ஜேர்மனி ஆதரவு

கொழும்பு, நவ.07

இலங்கை ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வது குறித்து ஜேர்மனி ஆதரவு அளிப்பதாக ஜேர்மனியின் உதவி அதிபர் சிக்மர் கேப்ரியல் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் ஆசிய பசுபிக் வர்த்தக சர்வதேச சம்மேளனத்தின் 15ஆம் அமர்வில் பங்கேற் பதற்காக, பிரதமர் ரணில் விக்ரமசிங்க சென்றிருந்தபோதே சிக்மர் கேப்ரியல் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடந்த சில மாதங்களாக சரியான பாதையில் முன்னேற்றமடைந்து வருகின்றது என்று ஜேர்மனியின் உதவி அதிபர் சிக்மர் கேப்ரியல் கூறியுள்ளார்.

நவீன அபிவிருத்தியுடன் கல்வித்துறை அபிவிருத்தி தொடர்பில் பயிற்சி நிறுவணங்கள் அமைப்பது குறித்தும் இதன் போது பிரதமர் கலந்துரையாடியுள்ளார். (ஐ)

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், நவ.07

தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

37 வயதுடைய துரைசிங்கம் துஸ்யந்தன் என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10-12)

# ஓய்வூதியம் கோரிப் போராடிய முன்னாள் இராணுவத்தினர் மூவர் வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு நவ.07

கொழும்புரயில்நிலையத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மூன்று முன்னாள் இராணுவ சிற்பாய்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

ஓய்வூதியம் பெரும் கால எல்லை நிறைவடைய முன்னர் (12 வருடங்கள்) கடமையில் இருந்து இடைவிலகிய ஊனமுற்ற இராணுவ வீரர்கள் தமக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் எனக் கோரி இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் மூவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கனடாவில் நிதி மோசடி; சிக்கினார் இலங்கைப் பெண்



கொழும்பு, நவ.07

கனடாவில் நிதி மோசடியில் ஈடுபட்ட இலங்கைப் பெண் ஒருவருக்கு கனேடிய நீதிமன்றம் ஒன்றால் ஐந்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஜயவத்த பெரேரா என்ற 40 வயதான பெண்ணுக்கே இந்த தீர்ப்பு விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண், முதலீட்டாளர்களுக்கு அதிக பங்கு லாபம் பெற்றுத் தருவதாக கூறி மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண் 2004 இல் இருந்து 2014 வரையான காலப் பகுதியில் 52 போலித்திட்டங்களை மேற் கொண்டுள்ளார். அத்துடன் அங்கு சில பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களிடமும் பண மோசடியில் ஈடுப்பட்டுள்ளார் என்று தெரிய வந்துள்ளது.

60 முதலீட்டாளர்களிடம் இருந்து 5.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணத்தை மோசடி செய்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜயவத்த பெரேரா தன்னுடைய குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து ஐந்து வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# படையினர் - பிரதேச செயலர் வாகனங்கள் மோதி விபத்து

யாழ்ப்பாணம், நவ.07

யாழ். பிரதேச செயலரின் வாகனத்துடன் பாதுகாப்புப் படையினரின் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவம் யாழ். பூநாறி மடத்தடியில் நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

யாழ். பிரதேச செயலரின் வாகனத்தை, காங்கேசன்துறையில் இருந்து யாழ். நகரை நோக்கிப் பயணித்த காங்கேசன்துறை கரையோரப் பாதுகாப்புப் படையினரின்கப் ரகவாகனம் யாழ்ப்பாணம் பூநாறி மடத்தடியில் மோதியது.

இந்த விபத்தில் பிரதேச செயலாளரின் வாகனம் சேதமடைந்தது.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

எனினும், நேரம் தாழ்த்தி பொலிஸார் அங்கு வந்து சேர்ந்தமையால், அந்தப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி நிலைமை சற்று நேரம் ஏற்பட்டிருந்தது. (ஐ-10-12)

# யானை தாக்கி சிப்பாய் பலி

பொத்துவில், நவ.06

பாணம கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் காட்டுயானை தாக்கியதில் உயிரிழந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

குறித்த சிப்பாய் சம்பவதினம் பயிற்சிகளை முடித்துவிட்டு படை முகாமுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்த போதே இவரைக் காட்டு யானை தாக்கியதாக கடற்படையினர் தெரிவித்தது.

இதில் 42 வயதுடைய சிப்பாயே பலியானவராவார். (ம)

# போலி ஆவணங்கள் தயாரிக்கும் நிலையம் பொலிஸாரால் முற்றுகை

கொழும்பு நவ.07

போலி ஆவணங்கள் தயாரிக்கும் நிலையம் எம்பிலிப்பிட்டிய பகுதியில் சுற்றி வளைக்கப்பட்டது.

இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பனாமுர வீதியிலுள்ள வீடொன்றிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து திீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

சந்தேகநபரை எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தென்னிலங்கை வர்த்தகர்களால் உள்ளூர் வர்த்தகத்தில் பாதிப்பு

## வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி கவலை

யாழ்ப்பாணம், நவ.07

வடக்கில் நடைபெற்று முடிந்த போரின் பின்னர் பெருவாரியாக தென்னிலங்கை வர்த்தகர்கள் வடக்குக்கு வந்து வியாபாரம் செய்கிறார்கள். இதனால் நமது உள்ளூர் வர்த்தகர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

வடமாகாணசபைஉறுப்பினர் அனந்தி சசிதரன் இவ்வாறு தொவித்தார்





வடமாகாண சபையால் கார்த்திகை மாதம் மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதை முன்னிட்டு வடக்கு சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் மலர்க் கண்காட்சி நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்

இவ்விடயம் தொடர்பாக அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

போர் நடைபெற்ற பின்னர் தென்னிலங்கை உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் வடக்கில் கால் ஊன்றிவருகின்றார்கள். மரவியாபாரத்தை மட்டும் நான் இங்கு குறிப்பிடவில்லை பலதரப்பட்ட வியாபாரத்தை அவர் கள் செய்து வருகின்றார்கள்.

வீதியோரங்களில் இவர்கள் ஏற் படுத்தியிருக்கும் இந்த வியாபாரச் செயற்பாடு எமது வியாபாரிகளின் பொருளாதாரத்தில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனை நான் உணர்கிறேன் எந்தளவுக்கு நம்மவர்கள் உணர்ந்துள்ளார்களோ தெரியவில்லை.

ஒரு கடைக்கு மின்சாரக் கட்டணம், கடை வாடகை செலுத்தி விட்டு எமது வியாபாரிகள் வியாபாரத்தைச்செய்து கொண்டிருக்க, தெற்கில் இருந்து வந்த தெருவோர வியாபாரிகள் மாநகர சபைக்கு நூறு ரூபாய் வரியைச் செலுத்திவிட்டு மிகவும்சிறப்பான முறையில் வியாபாரத்தைச் செய்து உழைத்துக்கொண்டு போகிறார்கள். இது ஒரு வேதனையான விடயம்.

இதே போன்றுதான் இந்த மரம்நடுகையும்கூட.தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்ட மரங்களையும்இவர்கள் விற்பனை செய்கிறார்கள். இதற்கு நாம் எமது உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் எமது உற்பத்தியாளர்களிடம் இருந்து நல்ல இன மரக் கன்றுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.- என்றார்.

இம்மலர்க் கண்காட்சியின் தொடக்க விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டார். இவரோடு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாணசபை உறுப்பினர்களான க.சிவாஜிலிங்கம், க.தர்மலிங்கம், சி.அகிலதாஸ், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் ஆகியோரும் திணைக்களத் தலைவர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (10)

## வடமராட்சி கிழக்கில் வீதிகள் படுமோசம்

பருத்தித்துறை, நவ.07

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு, அப்பகுதியிலுள்ள வீதிகள் புனரமைப்பு செய்யப்படாமை தடையாகவுள்ளது என்று பிரதேச மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பராமரிப்பிலுள்ள பருத்தித்துறை - மருதங்கேணி வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேசமயம், வீதிஅபிவிருத்தி திணைக்களத்தின் பராமரிப்பிலுள்ள மாமுனைக் கட்டைக்காடு வீதியின் பெரும்பகுதி மோசமான நிலையில் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதி உடுத்துறையில் இந்து கட்டைக்காடு வரை படுமோசமான நிலையில்காணப்படுகின்றது. இவ்வாறான நிலையால் இந்த வீதியால் நடத்தப்படுகின்ற அரச, தனியார் பஸ் சேவைகள் அடிக்கடி தடைப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (இ-31)

## வைத்தியசாலைக்குள் வாள்களுடன் நுழைந்தவர்களைக் கைது செய்க!

### பருத்தித்துறை நீதிவான் உத்தரவு

மந்திகை, நவ.07

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குள் வாள்களுடன் உள்நுழைந்த பத்துப்பேரினையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் பெருமாள் சிவகுமார் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார். துன்னாலை கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தை அடுத்து காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அச்சமயம் வைத்தியசாலைக்குள் மணலேற்றும் சவள், வாள் என்பவற்றுடன் சுமார் பத்துப்பேர் அத்துமீறி உள்நுழைந்தனர் என்று விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

அதனையடுத்து, அந்தச் சந்தேக நபர்களைக் கைது செய்து எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிவான் நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (இ-40)

## வாசிப்பு விழிப்புணர்வு...



வலி. தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் பொதுநூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலத்தை ஏற்பாடு செய்து நடத்தியது. யாழ். உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிச் சிறுவர், சிறுமிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். சுன்னாகம் பொதுநூலகம் வரை இந்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம் பெற்றுள்ளது. (ஐ)

## வீதிகளுக்கு கிரவல் போடுவதால் விழுந்து எழும்பும் பயணிகள்

வீதிகள் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் ஒப்பந்த நிறுவனங்கள் வீதிகளைப் புனரமைத்துத் தார் ஊற்றியபின்னர் அதற்கு மேலாக கண்டாவளை கிரவல் மண் தூவுகின்றனர்.

இதனால் வீதிகளில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் பயணிப்போர் விழுந்து எழும்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. கண்டாவளை கிரவல் மண்ணில் கற்குறுணிகள் அதிகம் காணப்படுகின்றன.

இதனால் சறுக்கும் தன்மை அதிகம் வீதிகளில் ஏற்படுகிறது. குறிப்பாக வீதி வளைவுகளில் இவ்வாறு சறுக்கி விழ வேண்டிய நிலைமை அதிகம் ஏற்படுகிறது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ)

## துன்னாலை மயானத்துக்கு அருகில் நகர சபை, பிரதேச சபை கழிவுகள்



### 'பொலித்தீன்'களால் மாடுகள் இறக்கும் நிலை

மந்திகை, நவ.07

துன்னாலை இந்து மயானத்துக்கு அருகாக கொட்டப்படும் கழிவுகளினால் கால்நடைகள் இறக்கின்றன என்று துன்னாலைப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வல்லிபுரம்- துன்னாலைவீதியில் உள்ள கியான்காடு இந்து மயானத்தை அண்டிய பகுதிகளில் பருத்தித்துறை பிரதேச சபை,நகரசபை ஆகியவற்றினால் கழிவுகள் கொட்டப்படுகின்றன என்று அவர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கொட்டப்படும் கழிவுகளில் பொலித்தீன் பைகள், திண்மப் பொருள்கள், வீட்டுக் கழிவுகள், கடைக்கழிவுக் குப்பைகள் என்பன காணப்படுகின்றன. அவற்றை கால்நடைகள் உணவாக்குவதனால்ஒவ்வாதபொருள்கள் கால்நடைகளின் வயிற்றுக்குள் செல்வதனால் அவை வயிறு பெருத்து இறந்து விடுகின்றன. இவ்வாறு துன்னாலை போதராமடம் பகுதியில் இரண்டு மாடுகள் இறந்துள்ளன என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

எனவே, பிரதேச சபையினர் கழிவுகளைக் கொட்டி அவற்றை உடனடியாகவே தீமூட்டி அழிக்க வேண்டும் என கால்நடை வளர்ப்பாளர்கள் கோருகின்றனர். (இ-40)

# வெல்லாவெளிப் பிரதேசத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்



மட்டக்களப்பு, நவ.07

மட்டக்களப்பு வெல்லா வெளி பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட இரு வெவ்வேறு பிரதேசங்களில் காட்டு யானைகள் கடந்த வெள்ளிக்கிழமை உட்புகுந்து ஆலயம் மற்றும் நெற் களஞ்சியசாலை ஆகியவற்றை உடைத்து சேதப் படுத்தியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

38 ஆம் கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத்துக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் ஆலயத்தின் பிரதான மண்டபத்தை உடைத்துச் சேதப்படுத்தியுள்ளன. அதேபோன்று காக்காச்சிவட்டை, பாலச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த வரதன் என்பவருக்குச் சொந்தமான நெற் களஞ்சியசாலைக்குள் உட்புகுந்த யானைகள் அங்கு களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த 45 நெல் மூடைகளையும் களஞ்சிய சாலையையும் உடைத்து சேதப் படுத்தியுள்ளன.

இந்தச்சம்பவங்கள் குறித்து கிராமசேவகர் மற்றும் வெல்லா வெளிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகள் மக்களின் உயிர்களை மட்டுமல்லாமல் உடைமைகளையும் அழித்து வருகின்றன என்று மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (எ)

# வெள்ளத்தில் மிதக்கும் தோப்பூர் பகுதி கிராமங்கள்



திருகோணமலை, நவ.07

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் மற்றும் பாலத்தோப்பூர் போன்ற பகுதிகளில் மூன்று தினங்கள் தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக அந்தப் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், கிண்ணியா, மூதூர், புல்மோட்டை மற்றும் திருகோணமலை போன்ற பகுதிகளில் மழை காரணமாக தாழ் நிலப் பகுதிகள் மழை நீரில் மூழ்கியுள்ளன.

தோப்பூர் நகரின் மத்தியில் அமைந்துள்ள மணிக் கூட்டு கோபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.

தோப்பூர் பிரதேசத்துக்கு உட்பட்ட அல்லைநகர், பாலத் தோப்பூர், இக்பால்நகர், செல்வநகர் பள்ளிக்குடியிருப்பு போன்ற கிராமங்களிலுள்ள நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கிராமங்களில் நீர் வடிந்தோடும் வகையில் ஒழுங்கான முறையில் வடிகான்கள் அமைக்கப்படவில்லை.

இதுவே வீடுகளுக்குள் நீர் புகுவதற்கு பிரதான காரணம் என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# வீச்சுவலை பயன்பாட்டால் கந்தளாய் மீனவர் பாதிப்பு

திருகோணமலை, நவ.07

கந்தளாய்க் குளத்தில் வீச்சு வலைகளைப் பாவித்து அதிகமானோர் மீன்பிடியில் ஈடுபடுவதால், தாம் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக கந்தளாய் மீனவ சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

கந்தளாய்க் குளத்தில் 200 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் நாளாந்தம் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கந்தளாய் குளத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் தமிழ் பேசுகின்ற மீனவர்களின் வலைகளைச் சேதப்படுத்துவது, தோணிகளை எரிப்பது, கடுமையான விதி முறைகளை ஏற் படுத்துவது போன்ற செயற்பாடுகள் அண்மைக் காலமாக நடைபெற்று வருகின்றன என்று கந்தளாய் மீனவ சங்க உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களிடம் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

தினமும் பிரச்சினை ஏற்பட்டே வருகின்றது.

கடந்த மாதம் தமிழ் பேசுகின்ற இரண்டு மீனவர்களின் தோணிகள் இனந் தெரியா தோரால் எரிக்கப்பட்டுள்ளன.

இதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் அதிகாரிகளும் தலைமைத்துவங்களும் பாராமுகமாக இருப்பதால் மேலும் பிரச்சினை ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

எனவே, உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு சுமுகமான மீனவத் தொழிலுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கந்தளாய் மீனவ சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர். (எ)

## கைக்குண்டுடன் ஒருவர் கைது!

திருகோணமலை, நவ.07

திருகோணமலை இலிங்க நகர் பகுதியில், பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரை, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கைது. செய்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரது வீட்டிலிருந்து கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளதாக திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலிங்கநகர் பகுதியைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் கிஷாந்தன் (வயது 28 ) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## ஆணின் சடலம் மீட்பு

ஹற்றன் நகரிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் ஆணின் சடலம் ஒன்றை ஹற்றன் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

ஹற்றன் நகரில் சுமை தூக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப் பிட்டிய வைத்தியசலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சேற்றுநீரால் அசௌகரியப்படும் விபுலானந்தாக் கல்லூரி மாணவர்



மட்டக்களப்பு, நவ.07

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலய பேத்தாழை விபுலானந்தாக் கல்லூரி மாணவர்கள் தமது கல்லூரியில் இருந்து குறிஞ்சி நகர் வரை செல்லும் வீதியில் ஒரு மாதத்திற்கும் மேலாக தேங்கி நிற்கும் சேற்று நீரால் பாடசாலை செல்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

வாழைச்சேனை பிரதேசத்தில் உள்ள மருதநகர், கண்ணன் கிராமம், விநாயகபுரம் மற்றும் பேத்தாழையின் ஒரு பகுதி ஆகிய கிராமங்களில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் பேத்தாழை விபுலானந்தாக் கல்லூரியில் இருந்து குறிஞ்சி நகர் வரை செல்லும் பாதையையே பிரதான பாதையாகப் பயன்படுத்துகின்றனர்.

குறித்த வீதியே குண்டும் குழியுமான நிலையில் சேற்று நீர் தேங்கிக் காணப்படுகிறது.

மேற்படி கல்லூரியின் விளையாட்டு மைதானத்தின் அருகில் இருந்து செல்லும் மற்றும் பல கிராமங்களை ஒன்றிணைக்கும் பாதையே இது.

இதனால், மாணவர்கள் சிறு மழை பெய்தால் கூட பாடசாலை செல்லும் போதும் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் போதும் உரிய நேரத்துக்குச் செல்ல முடியாமலும் சேற்று நீரின் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர்.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)



ஈழத்துச் திருச்செந்தூர் என்று அழைக்கப்படும் மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில முதன்முதலாக சூரபத்மனை வதம் செய்யும் சூரசம்ஹார வெள்ளோட்ட நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. (எ)

# கிண்ணியாவில் கைக்குண்டு மீட்பு



திருகோணமலை, நவ.07

கிண்ணியா காக்காமுனை 7ஆம் வட்டார பகுதியிலுள்ள வீடொன்றில் தோண்டப்பட்ட குழியிலிருந்து கைக்குண்டு ஒன்றை மீட்டு, செயலிழக்கச் செய்ததாக, கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வீட்டின் முன்பகுதியில் அத்திபாரம் இடுவதற்காகக் குழி தோண்டிய போது, கைக்குண்டு தென்பட்டது அதையடுத்து கிண்ணியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கைக்குண்டை மீட்டு, கிண்ணியா உப்பாறு பாலத்துக்கு அருகில் வைத்து செயலிழக்கச் செய்தனர்.

அந்தக் கைக்குண்டு விடுதலைப் புலிகளின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட குண்டாக இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பிரான்ஸில் தமிழ்ச்செல்வனின் நினைவு நிகழ்வு !



விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட 7 மாவீரர்களின் 9 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் பிரான்ஸில் இடம்பெற்றுள்ளன.

பிரான்ஸ் லாக்குர்நெவ் மாநகரசபை மற்றும் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, லாக்குர்நெவ் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ்ச்செல்வனின் நினைவுத்தூபி அமைந்துள்ள லாக்குர்நெவ் பகுதியில் இந்நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றுள்ளது.


இந்நிகழ்வில் லாக்குர்நெவ் மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் பாலசுந்தரம், பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு செயற்பாட்டாளர் சத்தியதாசன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றியிருந்தனர். (கு)

## ஜேர்மன் மொழியில் தமிழ்செல்வனின் உரைகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் ஆற்றிய உரைகளின் காணொலித் தொகுப்பு ஒன்று ஜேர்மன் மொழியில் வெளியிடப்பட்டுள்ளது.

சு.ப. தமிழ்ச்செல்வனின் ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவர் ஆற்றிய உரைகளுக்கு ஜேர்மன் மொழியில் துணைத் தலைப்பு கொடுத்து ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்பால் இக் காணொலி வெளியிடப் பட்டுள்ளது.

# ஈழத் தமிழர்கள் இருவருக்கு கானாவில் அதியுயர் விருது



மேற்கு ஆபிரிக்க நாடான கானா நாட்டின் சிறந்த ஏற்றுமதி தொழிலதிபர்களுக்கு வழங்கப்படுகின்ற ஜனாதிபதி உயர் விருது, இவ்வருடம் ஈழத் தமிழர் இருவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கு பகுதியைச் சேர்ந்த கணேசராசா சதீசன் மற்றும் கரணவாய் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி குகதாசன் ஆகிய இருவரும் இணைத்து 2000 ஆம் ஆண்டு முதல் கானாவில் விவசாய மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் ஐரோப்பிய நாடுகள் உட்பட பல நாடுகளுக்கு ஏற்றுமதியை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அண்மைக் காலமாக கானாவுக்கு ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொடுக்கும் முன்னணி தொழிலதிபர்களாக இந்த இருவரும் திகழ்ந்து வருகின்றனர்.

அந்தவகையில், கடந்த வருடம் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்ட இவர்கள், இவ்வருடம் கானாவின் தொழிலதிபர்கள் அனைவரையும் பின்தள்ளி முதலாம் இடத்தை பிடித்துள்ளனர்.

இதனால், கானாவில் வருடந்தோறும் வழங்கப் படுகின்ற சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான ஜனாதிபதி விருதும் தங்கப் பதக்கமும் இவர்களுக்கு கிடைத்துள்ளன. இதுபற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கும் தொழிலதிபர்களில் ஒருவரான கணேசராசா சதீசன், சிறந்த திட்டமிடலுடன் மனந்தளராத முயற்சியும் கடின உழைப்புமே முகவரி அறியாத தேசத்தில் கால் பதித்த தமக்கு உயர் விருதைப் பெற்றுத் தந்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். (கு)

# ஜேர்மனியில் தமிழ் மொழி கற்பித்தல் செயலமர்வு



தமிழ்க் கல்விக் கழகத்தின் கீழ் ஜேர்மனியில் இயங்கும் 120 இற்கு மேற்பட்ட தமிழ் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் அண்மையில் இடம்பெற்றுள்ளன.

ஜேர்மனியில் தமிழ்மொழி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் இலகுவாகப் பங்கேற்கும் வகையில் இந்தச் செயலமர்வு ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. ஐந்து மாநிலங்களில் இச் செயலமர்வுகள் நடைபெறுவதற்கான பொறிமுறைகள் வகுக்கப்பட்டுச் சிறப்பாக ஒழுங்கு செய்யப் பட்டது. இலங்கையிலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்களும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் விரிவுரையாளரும் இந்தச் செயலமர்வில் பங்கேற்றனர்.

ஜேர்மனியில் பிறந்து வளர்ந்து தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் 350 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கேற்ற இந்தச் செயலமர்வு மூன்று நாள்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளது.

தமிழ்க் கல்விக் கழகத்தின் அவ்விசேட முயற்சியால் ஜேர்மனி முழுவதிலும் பரந்து வாழும் இளைய ஆசிரியர்கள் பொதுப் பணியாற்றுவதற்கான பயிற்சிகளையும் கற்பித்தல் திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகளையும் பெற்றுள்ளனர்.(கு)

# பிரித்தானியாவில் வளர்தமிழ்ப் பாடநூல் ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு



தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வளர் தமிழ் பாடநூல் ஆசிரியர் பயிற்சி செயலமர்வு பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

700 மேற்பட்ட ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் இவ்வருடம் மூன்று செயலமர்வுகளை நடத்தியுள்ளது. இந்தச் செயலமர்வுகளின் போது, மழலையர் நிலை முதல் வளர் தமிழ் 12 வரை கற்பிக்கும் ஆசிரியர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கான கற்பித்தல் உத்திகள் தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் வழங்கப்பட்டன.

இதில் சிறப்பாக, அன்றாட வாழ்க்கையில் நடப்பது போன்று காட்சிப்படுத்தலுடன் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவை பெரிதும் வரவேற்புப் பெற்றுள்ளன. இது தங்களை மேலும் வளப்படுத்தும் என இதில் கலந்துகொண்ட 350 மேற்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். இதனை ஊக்குவிக்கும் முகமாக உலகத் தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவையின் பொறுப்பாளர் திருமதி நகுலா அரியரட்ணம் உரையும் அமைந்திருந்தது.

தேர்வுத்தாள்கள் தொடர்பான அறிவுறுத்தல்களும் சூ யோ பற்றிமாகரன் என்பவரால் கேம்பிறிச் GCE(O/L) &GCE(A/L) தேர்வுகள் பற்றிய விளக்கங்களும் கொடுக்கப்படவுள்ளன. அதே நேரம் இந்தியாவிலிருந்து வருகை தந்த பேராசிரியர் அறிவரசன் கலந்து சிறப்பித்து தமிழ் இலக்கியமாணி கற்கை நெறி தொடர்பாக விளக்கியுள்ளார்.

கடந்த வருடம் 100 இற்கு மேற்பட்ட பிரிட்டன் வாழ் தமிழர்கள் முதலாம் ஆண்டு தமிழ் இலக்கியமாணி தேர்வில் கலந்து கொண்டு சித்தியடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


குறிப்பாக இச்செயலமர்வில் வளர்தமிழ் ஆசிரியர்களை ஒருங்கிணைத்தல், மாணவர் மீதான மதிப்பீடுகளை மீள் பார்வை செய்தல், தேடல் பரிமாறல் என பல பயன்களைப் பெற முடிந்தது என செயலமர்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

இறுதியாக புலம்பெயர் மண்ணில் எமது தாய் மொழி தமிழ் அழிந்துவிடாமல் காத்து எமது எதிர்காலச் சந்ததியிடம் ஒப்படைக்கும் பெரிய பணியைச் செய்யும் ஒவ்வொருவருக்கும் பிரித்தானியக் கிளை கல்வி மேம்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் ஞானி நன்றி தெரிவித்துள்ளார். (கு)



2016 ஆம் ஆண்டுக்கான தமிழ் ஊக்குவிப்பு போட்டி ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியாவின் பல மாநிலங்களிலும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழ் மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர். போட்டி நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களைப் படங்களில் காணலாம். (கு)

திருச்சிற்றம்பலம் பரந்தாமன்.



# ஊக்கமது கைவிடேல்

ஸ்ரீலங்காவை ஆளுகின்ற இன்றைய கூட்டரசாங்கத்தின் பிரசவிப்பிற்குத் தான் ஆற்றிய பங்களிப்பினை வெறுமனே ஒரு மருத்துவிச்சியின் சேவை என்ற அளவோடு சுருக்கி விட நிகழும் எத்தனிப்புகளைத் தமிழ் தேசம் அனுமதிக்க முடியாது.

மருத்துவிச்சி என்றால், அவரின் தொழிலே, யாரோ பெறுகின்ற குழந்தையின் பிரசவத்திற்குப் பணியாற்றுவதுதான். ஒரு குழந்தையின் பிறப்பிற்குப் பணியாற்றிய பின்பு, அடுத்த குழந்தையின் பிரசவத்திற்குப் பணியாற்ற அவர் போய்விடுவார் - போய்விட வேண்டும். அது மட்டுமே அவரது கடமை.ஒரு மருத்துவிச்சி என்ற பரிமாணத்தில் வேறு அர்த்தங்கள் அவருக்குக் கிடையாது. குழந்தைப் பிரசவத்திற்குப் பணியாற்ற ஒரு மருத்துவிச்சி மறுத்துவிட்டால், வேறு மருத்துவிச்சியை நாடி பிரசவத்திற்கான பணிவிடைகளைப் பெற்றுவிடலாம்.

இலங்கைத் தமிழர்களையும், இதுபோல - ஒரு மருத்துவிச்சி என்ற அளவோடு பாவித்து - இன்றைய கூட்டரசாங்கத்தைப் பிரசவித்துவிட்டுக் கழற்றிவிடுவதற்குத் தான் அமெரிக்காவும், இந்தியாவும், கொழும்பும் விரும்பின. இப்போதும் அந்த விருப்பத்துடனேயே செயற்படுகின்றன. ஆனால், தமிழர்களின் அர்த்தம், அவர்கள் ஒரு தேசம் என்ற பரிமாணத்தில், வெறுமனே இந்த கூட்டரசாங்கத்தை உருவாக்குவதோடு மட்டும் முடிந்து விடவில்லை.

ஐக்கிய தேசிய கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நடந்தது ஒரு காதல் திருமணம் அல்ல. அது ஓர் ஏற்பாட்டுத் திருமணம். அது ஓர் ஒரே-பாற் திருமணம் கூட. அமெரிக்காவும் இந்தியாவும் வேறு நலன்நாடிகளும் செய்த ஏற்பாடு அது. இரண்டு கட்சிகளுமே மணம் முடித்துக்கொள்ள இணங்கிய போதிலும், தாமாகவே ஓர் அரசாங்கத்தைப் பிரசவிக்கும் அக வல்லமை அற்றவையாகவே இருந்தன. எனவே - இவ்விரண்டு கட்சிகளையும் இணைத்துத் தாம் பிறப்பிக்கத் தீர்மானித்த கூட்டரசாங்கத்தைச் சுமந்து பிரசவிக்க - இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் சேர்ந்தியங்கிய ஆட்களுக்கும் ஒரு வாடகைத்தாய் தேவைப்பட்டாள். அந்தப் பணியைச் செய்வதற்கு இணங்கக்கூடிய நிலையில் - இணங்க வைக்கப்படக் கூடிய நிலையில் - இருந்தது ஒரே ஒரு வாடகைத்தாய் மட்டும்தான். அது தான் தமிழ் தேசம். தமிழ் தேசத்தின் சார்பில், தமிழ் தேசிய கூட்டமைப்பு, அந்த பணியைச் செய்துமுடிக்கும் பொறுப்பை ஏற்றது.

தனது இறைமை மறுக்கப்பட்டு, தனது தனித்துவ தேச அங்கீகாரம் பறிக்கப்பட்டு - சில நூறு ஆண்டுகளாகவே அரசியல் நிர்க்கதி நிலையிலிருக்கும் தமிழ் தாய் - மறுக்கப்பட்டுப் பறிக்கப்பட்ட தனது பிறப்புரிமைகள் மீள உறுதிப்படுத்தப்படும் என்ற வாக்குறுதியினதும், நம்பிக்கையினதும் அடிப்படையில் - நடக்கவிருந்த ஏற்பாட்டுத் திருமணத்தின் கூட்டரசாங்கக் குழந்தையைத் தன் வயிற்றிலே சுமந்து ஈன்றெடுக்கும் வாடகைத் தாய் என்ற தற்காலிகப் பாத்திரத்தை ஏற்க நிபந்தனையற்றுச் சம்மதித்தாள்.

இலங்கைத் தமிழ் தேசத்தைப் பொறுத்த வரையில் - இந்த கூட்டரசாங்கத்தைப் பிரசவித்த தாயே அவர்கள்தான்.



தமிழர்களின் வயிற்றிலிருந்து - தமிழர்களின் வலிகளிலிருந்து - தமிழர்களின் தீர்மானத்திலிருந்து தான் இந்த கூட்டரசாங்கம் பிறந்தது.

இந்த கூட்டரசாங்கக் குழந்தையைத் தன் வயிற்றிலே சுமந்து பெற்றெடுக்கத் தமிழ்த் தாய் மறுத்திருந்தால், இந்த குழந்தையின் கருவையே உருவாக்கியிருக்க முடியாது - மஹிந்த ராஜபக்ஷ விட்டிருக்கமாட்டார். இந்த கூட்டரசாங்கமே பிரசவிக்கப்பட்டிருக்காது என்பதற்கும் மேலாக, இந்த திருமணத்தையே ஏற்பாடு செய்திருக்க முடியாது - மஹிந்த ராஜபக்ஷவே தொடர்ந்தும் இந்த தீவை ஆண்டிருப்பார். ஆட்சியிலிருந்து அவரை அகற்றுவதற்குத் துணை செய்ய, தமிழ் தேசத்தின் சார்பில் இரா. சம்பந்தன் வழங்கிய ஒப்பு தலே - அதன்பின்பு நடந்த எல்லாவற்றுக்கும் ஆணிவேர்.

இப்போது - இந்த கூட்டரசாங்கக்குழந்தை பிரசவிக்கப்பட்டு, அதற்கு இரண்டு வயதும் ஆகப்போகின்றது. ஆனால், ஒரு சராசரி நிலை ஆரோக்கியத்தோடு கூடப் பிறந்திருக்காத இந்தக் குழந்தை, இருக்கின்ற ஆரோக்கியத்தையும் இழந்தபடியே இருக்கின்றது.

வேலை முடிந்ததும் ஒரு மருத்துவிச்சியைக் கழற்றிவிடுவது போலத் தமிழ் தாயைத் தவிர்த்து விட்டுப் பச்சைக் குழந்தையான இந்த கூட்டரசாங்கத்தை வளர்க்க அதன் தந்தையர்களால் முடியாதுள்ளது. தாயை கைவிட்டுவிட்டு - தாய்ப்பாலின் இன்றியமையாத ஊட்டச் சத்தைப் புறக்கணித்துவிட்டு - தாய் அணைப்பின் அடிப்படையை உதாசீனப்படுத்திவிட்டு - மேற்குலகிலும் இந்தியாவிலும் தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட செயற்கைப் பால்மாவை உள்நாட்டின் மாசடைந்த தண்ணீரில் கரைத்து ஊட்டி - அரைகுறை ஆரோக்கியத்தோடு பிரசவிக்கப்பட்டிருக்கும் இந்த கூட்டரசாங்க குழந்தையைப் பாதுகாக்கவோ வளர்த்தெடுக்கவோ அவர்களால் முடியாதுள்ளது.

இந்த கூட்டரசாங்கக் குழந்தையைத் தொடர்ந்து பாதுகாத்து - அது திடகாத்திரமாக எழுந்து நிற்பதற்குத் தாயும், தாய்ப்பாலும், தாயின் ஆதரவும் அரவணைப்பும் - இன்றியமையாத கட்டாயத் தேவைகளாய் இருக்கின்றன. பெற்றெடுத்துத் தந்துவிட்டு, தருவதைப்பெற்றுக் கொண்டு ஒதுங்கி இரு என்று வாடகைத் தாயை வெட்டி அனுப்பிவிடவே குழந்தையின் தந்தையர்கள் விரும்புகின்ற போதிலும், அவ்வாறு செய்துவிடமுடியாத அளவுக்கு அவர்களுக்கு அவள் தொடர்ந்தும் தேவைப் படுகின்றாள்.

எனவே - இந்த வாடகைத் தாய் குழம்பி விட்டால், குழந்தைப் பராமரிப்பு சிக்கலாகிவிடும். குழந்தையின் ஆரோக்கியம் மேலும் மோசமடைந்தால், ஏற்பாட்டுத்திருமணக் குடும்பம் பெரும் பிரளயமாகிவிடும். குடும்பத்தில் கலகம் ஏற்பட்டால், வீட்டுக்கும் அயலுக்கும் ஊருக்கும் அது நல்லதல்ல.

எனவே தான், தாயின் தேவை தொடர்ந்தும் இன்றியமையாதது ஆகின்றது. அதனால்தான் - நிதானமாகவும் பொறுமையாகவும் இருக்கும்படியாகவும், குழந்தைக்காகத் தொடர்ந்தும் தனது சுகங்களை அர்ப்பணம் செய்யும்படியாகவும், தொடர்ந்தும் துயரங்களைத் தாங்கும்படியாகவும் தாய் அறிவுறுத்தப்படுகின்றாள். தனது நலன்களை எல்லாம் தியாகம் செய்துவிட்டு - தான் பெற்ற குழந்தையைத்தானே பாதுகாப்பதே ஒரு தாயின் தலையாய கடமை என அவள் அறிவுறுத்தப்படுகின்றாள்.

'இது உன்னுடைய குழந்தை. வேண்டி விரும்பி நீ பெற்றெடுத்த செல்லம். அது நோயுற்று நலிவுற்று இறந்து போவதற்கு நீயே விடலாமா? நீ பெற்றெடுத்த குழந்தையைப் பாதுகாப்பது உனது கடமை அல்லவா? எவ்வளவு வலிகளுக்குப் பிறகு நீ பிரசவித்த குழந்தை இது. நீயே இதனைப் பாதுகாக்க மறுத்தால், நீ பட்ட வேதனைகள் எல்லாம் பெறுமதி அற்றவை ஆகிவிடும் அல்லவா?' - என்று தமிழ் தாய் மந்திரிக்கப்படுகின்றாள். 60 ஆண்டு காலமாக அவள் பட்ட கொடுமைகள் எல்லாமே - இந்த கூட்டரசாங்க குழந்தையைப் பிரசவித்துப் பாதுகாக்க மட்டுமே என்றவாறாக அவள் நம்பவைக்கப்படுகின்றாள். ஒரு தாயாகப் பெருமைப்படுத்தப்படுவது போலப் பூசித்துப் பாவிக்கப்பட்டு, உண்மையில் ஒரு பொருட்டற்ற பொருள் போலச் சிறுமைப்படுத்தப்படுகிறாள்.

ஒருமானிடப்பிறவியாக - ஒருபெண்ணாக - தனித்து - சார்ந்திராது - தன்னாதிக்கத்துடனும் இறைமையுடனும் - தனது பூர்வீக நிலத்தில் வாழுவதற்கு அவளுக்கே உரித்தாக உள்ள உரிமைகள் மீள அங்கீகரிக்கப்படும் என்று வழங்கப்பட்ட நம்பிக்கைகள் கைவிடப்பட்டு - குழந்தைக்குப் பாலும், அரவணைப்பும், பாதுகாப்பும் கொடுப்பதற்குத் தேவையான அளவுக்கு மட்டும் ஆரோக்கியத்துடன் வாழுவதற்குப் போதுமான சலுகைகளும் வசதிகளும் மட்டுமே அவள் வழங்கப்படுகின்றாள்.

இவ்வாறாகத் தாம் அவளைத் தொடர்ந்து ஏமாற்றிப் பயன்பெற முனைவதால் - தான் தொடர்ந்து ஏமாற்றப்படுவதை இந்தத் தமிழ் தாய் எந்த எல்லை வரை பொறுப்பாள் என்ற பதற்றமே, அவளை ஒரு தாயாக வாடகைக்கு அமர்த்தியவர்களிடம் இருக்கின்றது. அதனால் - தொடர்ந்தும் அவளைப் பொறுமையின் எல்லைக்குள்ளேயே வைத்திருப்பதற்கு எவ்வகையான சலுகைகளை இன்னும் அள்ளி வழங்கலாம் என்றே அவர்கள் சதா சிந்தித்தபடி இருக்கின்றார்கள். ஆனாலும் - அவள் குழம்பிவிடாமல் இருப்பதற்கான அதியுச்ச உத்தரவாதமாக - அவளுக்குத் தாம் முன்னர் அளித்த நம்பிக்கைகளின் அடிப்படையில் - அவளின் பிறப்புரிமைகளை அங்கீகரித்து, அவளுக்கு மதிப்பளிப்பதற்கான மார்க்கங்களை அவர்கள் மனவிருப்போடு தேடுகிறார்கள் இல்லை.

**ஐக்கிய தேசிய கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நடந்தது ஒரு காதல் திருமணம் அல்ல. அது ஓர் ஏற்பாட்டுத் திருமணம். அது ஓர் ஒரே-பாற் திருமணம் கூட. அமெரிக்காவும் இந்தியாவும் வேறு நலன்நாடிகளும் செய்த ஏற்பாடு அது. இரண்டு கட்சிகளுமே மணம் முடித்துக்கொள்ள இணங்கிய போதிலும், தாமாகவே ஓர் அரசாங்கத்தைப் பிரசவிக்கும் அகவல்லமை அற்றவையாகவே இருந்தன. எனவே - இவ்விரண்டு கட்சிகளையும் இணைத்துத் தாம் பிறப்பிக்கத் தீர்மானித்த கூட்டரசாங்கத்தைச் சுமந்து பிரசவிக்க - இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் சேர்ந்தியங்கிய ஆட்களுக்கும் ஒரு வாடகைத்தாய் தேவைப்பட்டாள். அந்தப் பணியைச் செய்வதற்கு இணங்கக்கூடிய நிலையில் - இணங்க வைக்கப்படக் கூடிய நிலையில் - இருந்தது ஒரே ஒரு வாடகைத்தாய் மட்டும் தான். அது தான் தமிழ் தேசம்.**

(தொடரும்...)

# மனிதனைத் தேடும் மனிதன் 2

வேதகாலம், மணிப்புரி என்ற நாட்டின் மன்னன் துறவறம் பூண்டு குருஷேத்திரம் வருகிறான். மெய்ஞ்ஞானம் பெற்ற அந்த முனிவனிடம் மண்டியிடுகிறான்.

''நான் மணிப்புரி நாட்டின் மன்னன். எனது வயோதிபத்தில் வாழ்க்கையைத் துறந்து விட்ட நான், மெய்ப் பொருளைக் கண்டுகொள்ள விரும்புகிறேன். நீங்கள் தான் எனக்கு ஞானஒளி காட்டி வழி காட்ட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான்.

தியானத்திலிருந்துவிழித்துக்கொண்ட முனிவர், மன்னனைப் பார்த்து, ''நான் செத்துவிட்டதும் என்னிடம் வா'' என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடிக் கொண்டார்.

ஒன்றுமே புரியாது, குழப்பமடைந்தவனாக ஆச்சிரமத்துக்கு வெளியே வந்த மன்னன், முனிவனின் சீடனை அழைத்து, முனிவன் கூறிய வார்த்தைகளுக்கு அர்த்தம் கேட்டான்.

''நான் செத்துவிட்டதும் என்று முனிவர் தன்னைக் குறிப்பிடவில்லை. உனக்குள்ளே, உனது ஆசையின் வடிவமாக, உனது அகங்காரத்தின் இருப்பிடமாக இயங்கிக்கொண்டிருக்கும், உனது 'நான்' முதலில் இறக்க வேண்டும். உனது சுயத்தின் சாவுக்குப் பின்னரே தன்னிடம் வருமாறு குரு நாதர் கூறியிருக்கிறார்'' என்று அந்தச் சீடன் அரசனுக்கு விளக்கம் கொடுத்தானாம்.

'நான்' என்ற பொய்யைச் சாகடிப்பதற்கு முன்னரே அந்த அரசன் செத்துப் போனான்.

'நான்' என்பது பொய் என்றால், எனது பிரக்ஞையின் பிரமை என்றால், எனது மன உலகம் சிருஷ்டிக்கும் மாயை என்றால், 'நான்' என்று எனக்குள்ளிருந்து சிந்திப்பவனாக, உணர்பவனாக, உணர்ச்சிவசப்படுபவனாக, ஆசைப்படுபவனாக, நானாக என்னை இயக்கி வரும் அந்தப் பிர கிருதி யார்?

''நான் என்பது ஓர் எண்ணம். எண்ண வோட்டத்தின் நெற்றிக் கண்ணாக அமையப் பெறும் ஓர் எண்ணம்; மன உலகம் உள்வாங்கிக்கொள்ளும் கோடானுகோடி எண்ணப் படிமங்களின் மையப் படிமமாக 'நான்' என்ற சுயம் எழுகிறது'' - என்கிறார் ஒரு ஞானி.

அப்படியானால், நான் என்பது மானசீகப் பொருளா? நினைவுகளின் நிழலாக, படிமங்களின் நடுவப் படிமமாக எண்ணச் சிதைவுகளிலிருந்து உயிர் பெறும் ஒரு மானசீகப் பேய்த் தோற்றமாக, மனிதனின் சுயத்தை, அவனது ஆளுமையைச் சித்திரிக்க முடியுமா?

'நான்' என்பது எனது மனநிலைக்கப்பால், எனது உயிர்நிலை சார்ந்த சுயவுணர்வாகவும் இயங்குகின்றது அல்லவா?


எனது உயிரின் இருப்பிடமாக, பொருளுருவம் பெற்றிருக்கும் உடற்கூறும், எனது சுயத்தின் திண்ணியமான பொருள் வடிவம் அல்லவா? உடலுமுயிருமாக, இரத்தமும் சதையுமாக, உணர்ச்சியின் பிண்டமாகவும் 'நான்' இருப்புற்று இருக்கிறேன் அல்லவா?

'நான்' என்பது அகவுலகத்து பிசாசு அல்ல. அன்றித் தெய்வலோகத்துப் பதுமையுமல்ல.

மனிதனென்பவன் இயற்கையின் குழந்தை. இயற்கை என்ற மாபெரும் கலைஞனால் படைக்கப்பட்ட ஒரு கலை வடிவம்; உயிர் வடிவம்; இயற்கையின் கருவகத்துடன் மனிதனின் தொப்புள்கொடி பின்னிப்பிணைந்து கிடக்கிறது. ஒருபுறம் இயற்கையின் மடியில் வேர் பதிந்து நிற்பவனாகவும், மறுபுறம் சமூகப் பிறவியாகவும், சமூக வாழ்வியக்கத்தில் உருவாக்கம் பெறுபவனாகவும், இருமுகப் பரிமாணத்தில் அவனின் வாழ்வு அமைகிறது.

மனிதன் உணர்ச்சிமயமானவன். உணர்ச்சிப் பிண்டமாக இயற்கை மனிதனைப் படைத்திருக்கிறது. இயல்பூக்கங்களாக, இயல்புணர்ச்சிகளால் (Instincts) அவை மனிதனை ஆட்டிப் படைக்கின்றன.

இயற்கை மனிதனைப் படைத்தது மட்டுமன்றி, மனிதன் தன்னைத் தானே படைத்துக்கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும், தனது இனத்தை விருத்தி செய்து கொள்ளவும் நிர்ப்பந்திக்கிறது. இந்த நிர்ப்பந்த சக்தியாக, உந்துதலாக, இயல்புணர்ச்சிகள் மனிதனை ஆட்கொள்கின்றன.



இந்த இயல்புணர்ச்சிகளின் மையமாகப் பாலுணர்ச்சி அமைகின்றது. ஒரு ஜீவ சக்தியாக, சகல ஜீவராசிகளையும் அது இயங்க வைக்கிறது; சகல உயிர்களையும் மீளாக்கம் செய்கிறது. அது என்னையும் உன்னையும் பற்றிக் கொள்கிறது. அதன் ஈர்ப்பு சக்தியிலிருந்து நீயும் நானும் தப்பிவிட முடியாது. படைத்தலின் தவிர்க்க முடியாத நியதியாக அது எம்மைப் பணியவைக்கிறது. இன்ப நுகர்ச்சியின் பரவசத்தைக் காட்டி அது எம்மை ஆகர்ஷித்துக் கொள்கிறது.

பாலெழுச்சியாகத் தோற்றப்பாடு கொள்ளும் இந்த ஜீவசக்தியை, லிபிடோ (Libodo) என்றும், உயிரியக்க சக்தி (Life force) என்றும், காதல் தெய்வம் (Eros) என்றும் பிரபல உளவியல் அறிஞரான சிக்மெண்ட் பிராய்ட் விவரிக்க முனைகிறார்.

பாலெழுச்சியின் திருவிளையாடல்களை மையக்கருவாகக் கொண்டே பிராய்டின் உளப்பகுப்பியல் (Psychoanalysis) மனிதனையும், மனித வாழ்வையும் விசாரணை செய்கிறது.


மனிதன் விழிப்பு நிலையில் இருக்கும் பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் சாதாரண பிரக்ஞைக்கு (Consciousness) அப்பால் நனவு அற்ற நிலையில் ஒரு மன உலகம் உண்டு. இது மனிதனின் ஆழ் மனம்; நனவிலிமனம் (Unconscious mind) இதுவே மனித மன இயக்கத்துக்கு ஆதாரமாக இருக்கிறது; மூலமாக இருக்கிறது. இந்த நனவிலி மனம் என்ற கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்டே பிராய்டின் உளவியல் தத்துவம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது.

இந்த நனவிலி மனம் எப்படியானது? எப்படி இயங்குகிறது? மனிதனின் ஆழ்மனப் பாதாளத்துக்குள், செத்துப்போன நினைவுகளின் கல்லறைகளுக்கு அப்பால் என்ன ஒளிந்து கிடக்கிறது?

மனதின் ஆழத்தில், நனவிலி மனதில் புதினமான பொக்கிஷம் எதுவுமே இருக்கவில்லை. மனிதன் கனவு கண்ட அழியாத ஆன்மாவோ அன்றி, அடுத்த உலகத்து அதிசயப் பொருள்களோ இருக்கவில்லை. பிராய்டின், மன அகழாய்வு தெய்வலோகத்து புதையல்கள் எதையும் தோண்டி எடுக்கவில்லை. அவரது உளப் பகுப்பியல் கண்டுபிடிப்பில், அடி மனதின் ஆழத்தில் ஓர் எரிமலை இருந்தது. உணர்ச்சிகளின் நெருப்பலைகளாக அது எரிந்துகொண்டிருந்தது. அடக்கப்பட்ட ஆசைகளின் அக்கினி நாக்குகள் நர்த்தனமாட அது குமுறிக்கொண்டிருந்தது. பிராய்டின் ஆழ்மனமானது கொதிக்கும் உணர்ச்சிகளின் கொப்பறை.

(தொடரும்)

**தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்**



*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*

*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

*''இந்த எழுத்துக்கள் யாரையாவது சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு'' - என்ற எதிர்பார்ப்புடன் அவர் வரைந்த இந்தக் கட்டுரைத் தொடரை நமது தற்போதைய சமூகத்தின் சிந்தனைக்காக இங்கு முன்வைக்கிறோம்.*

*அவர் எதிர்பார்த்தமை போல மனித மனம் பற்றிய இந்தத் தொடர், நமது வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் என்றே நாமும் நம்புகிறோம்.*

*அவரது சிந்தனைத் தெளிவை நாமும் தரிசிப்போம். வாருங்கள்...!*

> "மனிதனென்பவன் இயற்கையின் குழந்தை. இயற்கை என்ற மாபெரும் கலைஞனால் படைக்கப்பட்ட ஒரு கலை வடிவம்; உயிர் வடிவம்; இயற்கையின் கருவகத்துடன் மனிதனின் தொப்புள் கொடி பின்னிப்பிணைந்து கிடக்கிறது. ஒருபுறம் இயற்கையின் மடியில் வேர் பதிந்து நிற்பவனாகவும், மறுபுறம் சமூகப் பிறவியாகவும், சமூக வாழ்வியக்கத்தில் உருவாக்கம் பெறுபவனாகவும், இருமுகப் பரிமாணத்தில் அவனின் வாழ்வு அமைகிறது."

# விபத்து விழிப்புணர்வு ஒத்திகை...



விபத்து விழிப்புணர்வு தொடர்பான ஒத்திகை நிகழ்வு ஒன்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் நடத்தப்பட்டுள்ளது. சங்கானை பிரதேச செயலகத்துடன் இணைந்து இந்த நிகழ்வு கடந்த 3 ஆம் திகதி சங்கானை பிரதேச செயலகத்துக்கு முன்பாக நடத்தப்பட்டது. விபத்து ஒன்று இடம் பெறும் பட்சத்தில் அவசர நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பாக இதன் போது விளக்கமளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் யாழ். செயலக அதிகாரிகள், பொலிஸார், படையினர், வைத்தியசாலை ஊழியர்கள், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-58)

# காட்டடைப்பு வீதி மக்கள் பாவனைக்கு

## வலி. வடக்கு பிரதேச சபை நடவடிக்கை

கோப்பாய், நவ.07

காங்கேசன்துறை காட்டடைப்பு வீதி மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது. குறித்த வீதியை பாவனைக்கு விடுமாறு மக்கள் பிரதேச சபையினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கடந்த மார்ச் மாதம் இந்த வீதி படையினரால் விடுவிக்கப்பட்டது. எனினும், மக்கள் பயன்பாட்டுக்கு விடப்படாது காணப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 202 ஏக்கர் காணி காங்கேசன்துறையில் விடுவிக்கப்பட்டது. அதே வேளை, காட்டடைப்பு வீதி விடுவிக்கப்படாத நிலையில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தது.

இந்த நிலையில், வலி.வடக்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து அந்த வீதியைப் படையினர் விடுவித்தனர்.

எனினும், குறித்த வீதி பாவனைக்கு விடப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்திருந்தனர். விரைவில் இதற்கான நடவடிக்கையை பிரதேச சபை எடுக்க வேண்டும். இல்லாதுபோனால் மீண்டும் இந்த வீதியை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்று மக்கள் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வீதி கடந்த திங்கட்கிழமை மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-51)

# சிங்க இறால்பிடிக்கத் தடை

நவம்பர் மற்றும் மார்ச் மாதங்களில் சிங்க இறால் பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு அறிவித்துள்ளது.

சிங்க இறால் மேற் படிமாதங்களில் முட்டையிட்டுப் பெருக்கமடைகின்றது. இதனாலேயே இக் காலப் பகுதியில் இவற்றைப் பிடிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

முட்டைகளுடன் இவற்றைப் பிடிக்கும் மீனவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## தினசரி ராசி பலன் 07.11.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 6.15 - 7.15 |
| | மாலை : 4.45 - 5.45 |
| ராகு காலம் | : 7.30 - 9.00 |
| குளிகன் | : 1.30 - 3.00 |
| எமகண்டம் | : 10.30 - 12.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் - மேல்நோக்கு நாள்

**மேஷம்** : இன்று உங்கள் சிந்தனைகள் சிறந்து மிளிரும், அறிவு ஒளிரும் நன்நாள்.

**ரிஷபம்** : அமைதி நிறைந்து மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி காணும் நன்நாள்.

**மிதுனம்** : இன்று தங்களின் இதயத்தில் இரக்கம் மிகும் நன்நாள்.

**கடகம்** : உழைப்பு, இன்று சந்திராஷ்டமம் என்பதால் எடுக்கும் அனைத்து காரியத்திலும் நிதானம் மிகவும் தேவைப்படும் நாள். சந்திராஷ்டமம்: புனர்பூசம், பூசம்.

**சிம்மம்** : கோபம், அசுர குணம் மிளிரும், அன்பு குறையும் அனைவரிடத்திலும் அமைதியுடன் விலக நலம் நல்கும் நாள்.

**கன்னி** : பயம், எடுத்த காரியங்களில் தளர்வு கண்டு மனம் சோர்வடையும் நாள்.

**துலாம்** : எதிர்ப்புக்கள் எதிர்பாராமல் வாசல் கதவை தட்டும் நாள்.

**விருச்சிகம்** : செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும் நன்நாள்.

**தனுசு** : லாபம், அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும் நன்நாள்.

**மகரம்** : நன்மை, நெடுநாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் தரும் நன்நாள்.

**கும்பம்** : மகிழ்ச்சி, மன உளைச்சல்கள் குறைந்து குடும்பத்தில் குதூகலம் தரும் நன்நாள்.

**மீனம்** : பொறுமை, நிதானத்தை கடைப்பிடித்து நிம்மதியை நாடும் நாள்.

# அனுமதி பெறாமல் நிறுவியுள்ள விளம்பரப் பலகைகள் அகற்றப்படும்

## யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.07

யாழ். மாநகர சபையில் அனுமதி பெறப்படாமல் நிறுவப்பட்டுள்ள சகல விளம்பரங்கள் மற்றும் தட்டிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபை நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள், அமைப்புக்களின் நிலையான மற்றும் இலத்திரனியல் விளம்பரப் பலகைகளுக்கு உரிய அனுமதியை உடனடியாக பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார்.

அனுமதி பெறப்படாத சகல விளம்பரப் பலகைகள் மற்றும் தட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் மாநகர சபையால் அகற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-10)

## நாடகமும் அரங்கியலும் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,நவ.07

2016 ஜீ.சி.ஈ. சாதாரணதர பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பரீட்சைக்குத் தோற்றும் யாழ். வலயப் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திராஜா இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

கோப்பாய் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நல்லூர் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட மாணவர்களுக்கு 16 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு 17 ஆம் திகதி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் பயிற்சி முகாம் இடம்பெறவுள்ளது.

மாணவர்களையும் குறித்த ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஜ-7)

# சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 07

யாழ். நாவாந்துறை கடற்கரை வீதியில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இவரது சடலம் மீட்கப்பட்டது. 5 பிள்ளைகளின் தந்தையான 58 வயதான இவர் இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில் கடந்த சில நாள்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஜ-7)

# வாசகர் கருத்து மேடை



## வீதியோர மண்கும்பிகளை அகற்றி அனர்த்தத்தைத் தவிர்ப்போம்!

யாழ். மாநகர சபை பகுதியில் உள்ள பல வீதிகள், ஒழுங்கைகளின் இரு மருங்கிலும் வடிகான்களில் இருந்து அகற்றப்பட்ட கழிவு மண் கும்பிகளாகக் காணப்படுகின்றன.

இந்த மண் கும்பிகள் வீதி, ஒழுங்கைகள் எல்லாம் காணப்படுவதால் பாதசாரிகள், வாகனங்கள் வேகமாக வரும்போது ஒதுங்கி நிற்க முடியாத நிலை உள்ளது. வயோதிபர்களின் நிலைமையோ இன்னும் மோசம். அதேசமயம் மாரி காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. மழை பெய்யத் தொடங்கிவிட்டது. தொடர்ந்து அடைமழை பெய்ய ஆரம்பித்தால், தெருவோரங்களில் காணப்படும் மண்கும்பிகள் மெல்ல, மெல்ல கரைந்து - கழுவுப்பட்டு - மீண்டும் வடிகான்களுக்குள் சங்கமமாகிவிடும். மழை வெள்ள நீர் ஓட முடியாமல் தேங்கி, வீதிகளுக்கு வந்து தேங்கி நிற்கும்.

இதன் அருகிலுள்ள குடியிருப்புக்களின் வளவுகளுக்கும், வர்த்தக நிலையங்களுக்கும் இதனால் பாதிப்பு ஏற்படும். வீதிகள், ஒழுங்கைகள் எல்லாம் வெள்ளக்காடாகக் காட்சி தரும்.

இந்தக் கழிவு மண்ணை மாநகரசபையினர் உடனடியாக அகற்ற வேண்டும். அதனை வேறு தேவைகளுக்கு பள்ளங்களுக்கு நிரவ - பயன்படுத்தலாம். காலநேரத்தை வீணடிக்காது இந்த நல்ல காரியத்தை மாநகர சபையினர் செய்யவேண்டும்; விரைந்து செய்யத் தொடங்க வேண்டும்.

அனர்த்தங்களைத் தவிர்க்க முன்வாருங்கள். வரப்போகிறது மாரி.

எஸ்.பார்த்திபன்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# நாய்களால் கடியுண்ட 534 பேர் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை

## கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மட்டும்

கடந்த ஒக்ரோபர் மாதம் 534 பேர் நாய்க்கடிக்கு இலக்கான நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி சிவநாதன் யமுனாநந்தா தெரிவித்தார்.

அதேசமயம், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும் இலங்கை முழுவதும் 12 பேரும் நாய்க்கடிக்கு இலக்காகி இறந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது நாய் மற்றும் பூனைக் கடி போன்றவை கட்டுப்பாட்டினுள் இல்லை. கடந்த மாதத்திலிருந்து நாய்க்கடிக்கு இலக்காகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

நாய்க்கடி, பூனைக்கடி என்பன மட்டுமன்றி அவற்றின் நகக்கீறல்கள் ஏற்பட்டால் உடனடியாக அரச வைத்தியசாலைகளுக்குச் சென்று தடுப்பூசி போடுவதோடு, மருத்துவரிடமும் அதற்கான ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பெரும்பாலானோர் தெருவோர நாய்களின் கடிக்கு ஆளாகின்றனர். இதனை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். திண்மக் கழிவுகளை ஒழுங்கான முறையில் சுத்திகரிக்காமல் பாதையோரத்தில் மக் கள் கொட்டுவதால் அதனை உண்ணுவதற்காக தெருவுக்கு வரும் நாய்கள் வீதியால் பயணிப்போரைக் கடித்து விடுகின்றன.

குறிப்பாக, இரவு வேளையில் செல்பவர்களே அதிகமாக நாய்க்கடிக்கு இலக்காகின்றனர். அத்துடன் சிறுவர்கள் அயல் வீடுகளுக்கு விளையாடச் செல்லும் வேளைகளில் நாய்கள் கடிக்கும் சம்பவங்கள் நிகழ்கின்றன.

சிறுவர்கள் பிராணிகளால் கடியுண்டால் அல்லது நகக் கீறல்களுக்கு இலக்கானால் பெரியவர்கள் கவனித்து உடனடியாக அவர்களைச் சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும். வயது வித்தியாசமின்றி அனைவருமே தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

அசமந்தமாக இருந்தால், உயிரிழப்பைச் சந்திக்க நேரிடும் என்பதை அனைவரும் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (இ-10)

## சிறுவர்களுக்கு நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், பொம்மைவெளி சுகாதார சிகிச்சை நிலையத்தில் சிறுவர்களுக்கான மூளைக் காய்ச்சல் தடுப்பூசி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து போடப்பட்டது.

குறித்த தடுப்பூசி 2001 தொடக்கம் 2010 வரையான ஆண்டுகளுக்குள் பிறந்த சிறுவர்களுக்காக விசேடமாக வழங்கப்பட்டு வருகின்றது.

மூளைக் காய்ச்சல் தடுப்பூசி 2001 தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து வழங்கப்படாமலிருந்தது.

2009 ஆம் ஆண்டிலிருந்தே இந்த ஊசி தொடர்ந்து போடப்பட்டு வருகின்றது என்று சிகிச்சை நிலைய தாதி ஒருவர் குறிப்பிட்டார். சிறுவர்களின் நலன் கருதியே 2009 ஆம் ஆண்டில் இருந்து இடைவிடாமல் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-

## பல்கலைகளுக்கு மாணவர் அனுமதி மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்

### பேராசிரியர் குணரட்ண தெரிவிப்பு

பல்கலைக்கழகங்களில் உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதில் தலைவர் பேராசிரியர் எஸ்.எம். குணரட்ண தெரிவித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் தற்போது சுமார் 27 ஆயிரத்து 500 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படுகின்றனர். பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுகொண்ட பிள்ளைகளை பல்கலைக்கழகத்தில் சேர்க்க வேண்டும் என்பதையே பெற்றோர் எதிர்பார்ப்பதாக அமைந்துள்ளது.

மக்களின் வரியைக் கொண்டே மாணவர்கள் உயர் கல்வியைக் கற்கின்றனர். பல்கலைக்கழகக் கட்டமைப்பு நாட்டுக்கு மிகவும் அவசியமானது, மதிநுட்பமான சமூகம் ஒன்றையே கட்டியெழுப்ப வேண்டும் - என்றார். (ஐ)

## ரூ.21 லட்சத்துடன் இலங்கைக்கு வந்து சேர்ந்தார் பணிப்பெண்!

### 10 வருடங்கள் ஏமாற்றப்பட்ட நிலையில்!!

கொழும்பு, நவ.07

சவூதி அரேபியாவில் பத்து வருடங்களாக சம்பளம் பெறாமல் வீடு ஒன்றில் பணியாற்றி வந்த பெண் ஒருவர் இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தால் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

பெலியந்த பிரதேசத்தைச் சேர்ந்த நந்தா மனம்பேரி என்பவரே அந்தப் பெண் ஆவார்.


இலங்கை வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து 2006 ஆம் ஆண்டில் வீட்டுப் பணிப்பெண்ணாக அவர் சவூதி சென்றிருந்தார். வேலை செய்த குறித்த வீட்டில் சம்பளம் வழங்கப்படவில்லை. குடும்பத்துடன் தொடர்பு கொள்ளவும் தடைசெய்திருந்தனர்.

இது தொடர்பில் பெண்ணின் மகன் 2011 இல் பணியகத்தில் முறைப்பாடு செய்திருந்தார். மேலும் இரண்டு மாதங்களுக்கு முன்னரும் பெண்ணின் மகன் அமைச்சர் தலதா அத்துக்கோரளவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

அமைச்சர் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தியமையால் குறிப்பிட்ட பெண் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

இது விடயத்தில் தூதரகம் துரிதமாகச் செயற்பட்டு அந்தப் பெண்ணுக்கு 10 வருடச் சம்பளம் பெற்றுக் கொடுத்துள்ளது. (இ-11)

## மரண அறிவித்தல்



### சரவணமுத்து கருணாநிதி

(உரிமையாளர் - சூரியன் களஞ்சியம்)

காரைநகர், மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.194 , பிறவுண் வீதி , யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கருணாநிதி (செந்தில்) நேற்று முன்தினம் (05.11.2016) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் , காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவசோதி (கந்தன் களஞ்சியம்), கற்பகநாதன் (ஸ்ரீமாத வன்) மற்றும் பாக்கியவதி, காலஞ்சென்ற பரம்சோதி (வெங்கடேஸ்வரா) மற்றும் தவமணி, கோகிலாவதி, கணேசன் (ராசு களஞ்சியம்), சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாநிதி (கொழும்பு), தயாபரன் (சூரியன் களஞ்சியம் – யாழ்ப்பாணம்), தயாநந்தினி (லண்டன்), தயாளன் (நாராயணா ஹாட்வெயர்), தயாநந்தன் (சூரியன் களஞ்சியம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பர்ராஜசிங்கம் (நாராயணா ஹாட்வெயர்), வாசுகி, சிவராசா (லண்டன்), கஜந்தினி ஆகியோரின் அன்பு மாமனும், மயூரி, மஞ்சரி, கோபிநாத், கஜீவன், அனோஜன், அபிஷன், மதுரன், மிதுரா, மதுரா, சங்கவி, சஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவர்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2016) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 8.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.194, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

021 222 7044 (C/011)

தகவல் : குடும்பத்தினர்

## இலங்கை வங்கி பருத்தித்துறை, நெல்லியடி கிளைகளுக்கு பணவைப்பு இயந்திரங்கள்!

வடமராட்சி, நவ.07

வடமராட்சி பகுதியில் உள்ள பருத்தித்துறை, நெல்லியடி இலங்கை வங்கிக் கிளைகளில் இன்று 07 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தானியங்கி பணவைப்பு இயந்திரம் இயங்கவுள்ளது.

இவ்விரு வங்கிக் கிளைகளிலும் பணவைப்புத் தானியங்கி இயந்திரங்கள் பொருத்தும் பணி நேற்று நடைபெற்றது.

பண வைப்பாளர்களுக்கு இருந்து வரும் சிரமங்களைப் போக்கும் முகமாகவும், அவசரமாக பணவைப்போரின் வசதி கருதியும் பணவைப்புத் தாங்கி இயந்திரம் பொருத்தப்பட்டு இயங்கத் தொடங்கியுள்ளது. (இ-30)

## பயங்கரவாதத்துக்கு இணையாக மதுபாவனை; ஒழிக்க ஜனாதிபதி, பிரதமர் கூட்டு நடவடிக்கை

கொழும்பு, நவ.07

இலங்கையில் பயங்கரவாதத்துக்கு இணையாக மதுபாவனை பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்று அரச தலைவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மது பாவனையைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணைந்து கூட்டு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த மூன்று தசாப்தங்களாக காணப்பட்ட பயங்கரவாதத்தை விடவும் மதுபானம் மக்களுக்கும் நாட்டுக்கும் அச்சுறுத்தலாகியுள்ளது என்று கூறப்படுகிறது.

சிங்கப்பூர் - மலேசியா ஆகிய நாடுகளில் போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் கடுமையான சட்டத்திட்டங்கள் தொடர்பில் அந்த நாடுகளிலிருந்து உதவியை பெற்றுக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதமர் முன்னெடுக்கும் இந்த நடவடிக்கைக்கு பூரண ஆதரவு வழங்க அமெரிக்காவும் இணக்கம் வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூரில் செயற்படுத்தப்படும் போதைப்பொருள் கட்டுப்படுத்தல் சட்டதிட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வு பெற்றுக் கொள்வதற்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவை அங்கு அனுப்புவதற்காக நாடாளுமன்றத் துணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கு பிரதமர் தீர்மானித்துள்ளார்.

கொழும்பில் கட்டுப்படுத்தப்பட்டிருந்த போதைப் பொருள் பாவனை தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது.

இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பாக்.தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க நவீன டாங்கிகள்

## ரஷ்யாவிடம் வாங்கவுள்ளது இந்திய அரசு



டில்லி, நவ.07

எல்லையில் தாக்குதல் நடத்தும் பாகிஸ்தான் இராணுவத்துக்கு உடனுக்குடன் பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய இராணுவம், அதிரடித் திட்டத்தில் இறங்கியுள்ளது. இதற்காக, இரவு நேரங்களில் தாக்குதல் நடத்தும் திறன் வாய்ந்த, அதி நவீன டாங்கிகளை, ரஷ்யாவிடம் இருந்து வாங்க அரசு திட்டமிட்டுள்ளது.

சமீபத்தில் இந்திய இராணுவம், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்குள் புகுந்து அதிரடித் தாக்குதல் நடத்தி, 40 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகளைக் கொன்றுவிட்டு, வெற்றிகரமாக திரும்பியது. 'சர்ஜிகல் ஸ்டிரைக்' எனப் பெயரிடப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு பின், இந்திய எல்லையோர கிராமங்களில், பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்துவது அதிகரித்துள்ளது.

கடந்த ஒன்றரை மாதங்களில் மட்டும், 60 இற்கும் மேற்பட்ட முறை, பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளனர். இதற்குப் பதிலடி தரும் வகையில், நம் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

எனினும் இரவு நேரங்களில் திடீர் தாக்குதலை நடத்துவதால், அதை எதிர்கொள்வதில், இராணுவத்துக்கு சிக்கல் இருந்து வருகிறது. எனவே, பாகிஸ்தானின் தாக்குதலை சமாளிக்க, புதிய வியூகங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, இரவு நேரங்களிலும், அதிக திறனுடன் செயற்படும், டாங்கிகள் எனப்படும், அதிநவீன பீரங்கிகளை, பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, ரஷ்யாவிடம் இருந்து, முதல் கட்டமாக, 464 அதிநவீன டாங்கிகள் வாங்கப்படவுள்ளன.

இதுகுறித்து இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

போர்க் களத்தில் தரைப்படையில் பயன்படுத்தப்படும் அதி நவீன டாங்கிகளை, இந்தியா தொடர்ந்து வாங்கி வருகிறது.

போர்க்களம் மட்டுமின்றி, எல்லையில் நடைபெறும் ஊடுருவல் மற்றும் தாக்குதல்களை தடுக்க, இந்த வகை டாங்கிகளை பயன்படுத்த முடிவு செய்துள்ளோம்.

குறிப்பாக, பாகிஸ்தானை ஒட்டிய மேற்கு எல்லையில், இந்த வகை டாங்கிகளை கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, கூடுதலாக, இரவிலும், துரிதமாகச் செயற்படும் திறன் உடைய, 464 அதிநவீன டாங்கிகள், 13,448 கோடி ரூபா செலவில், ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்படும். இராணுவ அமைச்சகத்துக்கு, இதற்கான பரிந்துரையை அனுப்பி உள்ளோம். எல்லையில் நடக்கும் தாக்குதல்களை தடுக்க, இவை உதவியாக இருக்கும்."

இவ்வாறு அவர் கூறினார். (ஏ)

## அகமதாபாத்தில் மினிபஸ்–லொறி மோதி 14 பேர் சாவு



அகமதாபாத், நவ.07

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் மினிபஸ்மீது லொறி மோதியதில் 14 பேர் பலியாகினர். 3 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்துக் குறித்து பொலிஸார் கூறுகையில்;

கடந்தவெள்ளிக்கிழமை இரவு, பவகத் மாவட்டத்தின் வழிப்பாட்டுத் தலத்துக்குச் சென்றுவிட்டு ராஜ்கோட் மாவட்டம் நோக்கி திரும்பிச் சென்று கொண்டிருந்த மினிபஸ்ஸின் மீது வேகமாக வந்த லொறி மோதியது.

இதில் மினிபஸ்ஸில் பயணம் செய்த 14 பேர் பலியாகினர். 3 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய லொறிச் சாரதி தப்பிச் சென்றுவிட்டார். இதையடுத்து தீவிர தேடுதலில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஏ)

## ஆற்றில் கவிழ்ந்தது பஸ்; 18 பேர் நீரில்மூழ்கிச் சாவு!



இமாச்சலம், நவ.07

இமாச்சலப் பிரதேச மாநிலம், மாண்டி மாவட்டத்தில் 40 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் பயணித்த தனியார் பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், பயணிகள் 18 பேர் உயிரிழந்தனர். மேலும், 24 பேர் காயமடைந்தனர்.

மாண்டி நகரில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள பிருந்தாவனி என்ற இடத்தில் குறித்த பஸ் சென்றுகொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து பியாஸ் ஆற்றில் கவிழ்ந்தது.

தகவல் கிடைத்த பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தினர்.

விபத்தில் 18 பேர் இறந்தனர். மேலும் 24 பேர் காயம் அடைந்தனர். காயமடைந்த அனைவரும் மாண்டியில் உள்ள மண்டல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஏ)

## ஆணாக மாறினார் இளம் பெண்! மும்பை மருத்துவமனை சாதனை

மும்பை, நவ.07

பெண்ணை ஆணாக மாற்றிய அறுவைச் சிகிச்சை இந்தியாவில் வெற்றியளித்துள்ளது. மும்பையைச் சேர்ந்த தனியார் மருத்துவமனை இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளது.

குரோமசோம்களின் குளறுபடியால் பாதிக்கப்பட்டிருந்த பெங்களூரைச் சேர்ந்த 21வயது இளம் பெண், தன்னை முழுமையான ஆணாக மாற்றிக்கொள்ள விரும்பினார்.

இதையடுத்து முதல்கட்ட சிகிச்சையாக, கடந்த ஜனவரி மாதம் அவரது மார்பகங்கள் இரண்டும் அறுவைச்சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன. பின்னர், மற்றொரு அறுவைச் சிகிச்சை மூலம் கருப்பாதையும், கருப்பையும் நீக்கப்பட்டன.

அடுத்த கட்டமாக, அவரது உடலில் ஆண்மைச் சுரப்பிக்கான ஹோர்மோன்களை ஊக்குவிக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. இத்தனை சிகிச்சைகளையும் மனவலிமையுடன் எதிர்கொண்ட அவருக்கு சமீபத்தில் ஆணுறுப்பை அமைப்பதற்கான ஆபத்தான, அதிநவீன அறுவைச் சிகிச்சையும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.



அடுத்தகட்டமாக, இதற்காக அவரது முழங்கையின் ஒரு பகுதியில் இருந்து தசை வெட்டி எடுக்கப்பட்டு, ஆணுறுப்புடன் சிறுநீர் பாதையும் வடிவமைக்கப்பட்டு, அடிவயிற்றில் பொருத்தப்பட்டது.

பின்னர், அதே முழங்கை பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட இரத்த அணுக்கள் அந்த உறுப்புக்குள் செலுத்தப்பட்டன.

இதன் மூலம் இந்த பிறப்புறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை முழு அளவில் வெற்றி பெற்றுள்ளது.

மிகவும் சிக்கலான இந்த சிகிச்சை முறையைப்பற்றி, மும்பையில் உள்ள 'போர்டிஸ் எஸ். எல். ரஹேஜா' ஆஸ்பத்திரியின் மாற்றுறுப்பு மற்றும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணரான டொக்டர் பராக் டெலாங் கூறுகையில்:-

"இந்த சிகிச்சையின் இறுதி கட்டமாக ஆணுறுப்பின் எழுச்சிக்குத் தேவையான 'செயற்கை பம்ப்' ஒன்று இன்னும் 2-3 மாதங்களில் அவரது உடலில் பொருத்தப்படவுள்ளது, அதன் பின்னர், இந்த 'வாலிபர்' தனது புதிய உடல் மற்றும் புதுப் பாலின அடையாளத்தைக் கண்டு மகிழ்ச்சியடைவார்' என்று நம்புகிறோம் என்று தெரிவித்துள்ளார். (ஏ)

## அஞ்சலிக் கூட்டத்தில் வன்முறை: பொலிஸார் தாக்குதல்; 12 பேர் காயம்

ஜம்மு, நவ.07

இந்திய நிர்வாகத்துக்கு உட்பட்ட காஷ்மீரில், இறுதி அஞ்சலிக் கூட்டம் ஒன்றில் பொலிஸார் நடத்திய கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு மற்றும் பெல்லட் குண்டுத் தாக்குதலில் 12 பேர் காயம் அடைந்துள்ளனர். அதே சமயம், பிரிவினைவாத ஆதரவு போராட்டக்காரர்கள் பாதுகாப்பு படையினர் மீது கற்களை வீசி எறிந்தனர்.



இரு தினங்களுக்குமுன் பாதுகாப்புப் படையினரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒரு 16 வயது சிறுவன் சுயநினைவற்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து உயிரிழந்தார். அவரை அடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்ட போது இந்த மோதல் வெடித்துள்ளது.

பாதுகாப்பு படையினரின் காவலில் இருந்தபோது சிறுவன் சித்திரவதைக்கு உள்ளானதாக அந்தச் சிறுவனின் குடும்பத்தார் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அவர் தானாகவே விசத்தை உட்கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்திய நிர்வாகத்துக்கு உட்பட்ட காஷ்மீரில் பிரபல தீவிரவாதத் தலைவர் ஒருவர் பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதற்குபின், கடந்த 4 மாதங்களாக அங்கு அமைதியின்மை நிலவி உள்ளது. (ஏ)

## இணையங்களை கண்காணிக்க டில்லிப் பொலிஸாருக்கு அனுமதி

இணையத்தளங்களில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு டில்லிப்பொலிஸாருக்கு இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் முதல்முறையாக அனுமதி வழங்கியுள்ளது.

தீவிரவாத அமைப்புகள் இணையத்தளங்கள் மூலம் தீவிரவாதப் பிரசாரங்களையும் இளம் தலைமுறையிடையே பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனைத் தடுக்கும் வகையில் இணையத் தளங்களில் தீவிரவாதிகளைக் கண்காணிக்கும் பணியை டில்லி பொலிஸ் மேற்கொள்ளவுள்ளது.

இதற்காக பொலிஸ் துறை சிறப்புப் பிரிவுக்கு தனி அலுவலகம் அமைக்கப்பட்டு தொலைத் தொடர்பு தொழில்நுட்பக் கருவிகள் மூலம், தீவிரவாதிகள் பயன்படுத்தும் அனைத்து வகையான சமூக இணையத் தளங்களும் கண்காணிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

பன்னாங்கண்டி – மேட்டுக்காணி விற்பனைக்கு

பரந்தன் மூன்றாம் வாய்க்கால் பூங்காவனம் சந்தியிலிருந்து கென்னடி றோட்டில் பன்னங்கண்டி கிளி/25 அலுவலகம் முன்பாக அரை ஏக்கர் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 0779352274, 0777402590, 0779654201

## கார்க்குண்டுத் தாக்குதல் சோமாலியா நாடாளுமன்று அருகே



மொகடிஷு, நவ.07

சோமாலியா நாட்டின் நாடாளுமன்றம் அருகே அல்பாப் தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் ராணுவத்தினர் இருவர் பலியாகினர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் மேற்கத்தைய நாடுகளின் ஆதரவுடன் நடைபெற்றுவரும் ஆட்சியை எதிர்த்து அல்பாப் தீவிரவாதிகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்கு பாதுகாப்பு மற்றும் அமைதியை நிலநாட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் கென்யா, ஜிபோட்டி, உகண்டா, எதியோப்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கூட்டுப் படையினரை குறி வைத்தும் அல்பாப் தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

மேலும், வெளிநாட்டினர் அதிகமாகக் கூடும் பிரபல விடுதிகளின்மீது தாக்குதல் நடத்தி, பலரைச் சுட்டுக் கொன்றும், சிலரை பணயக்கைதியாகப் பிடித்து வைத்தும் அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், சோமாலியாவின் தலைநகரான மொ க டிஷு நகரில் உள்ள நாடாளுமன்றம் அருகே அல்பாப் தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் ராணுவத்தினர் இருவர் பலியாகினர்.

வெடிகுண்டுகளால் நிரப்பப்பட்டிருந்த காரைச் செலுத்தி வந்த தீவிரவாதி, இராணுவ வாகனத்தின் மீது மோதி இந்த தாக்குதலை நடத்தினார் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஏ)

# தீவிரவாதிகள் தாக்குதல்; ஈராக்கில் 9 பேர் சாவு!

பக்தாத், நவ.07

ஈராக்கின் சலாஹுதீன் மாகாணத்தில் உள்ள திக்ரித் நகரில் நேற்று தீவிரவாதிகள் நடத்திய கார்க் குண்டுத் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர். 25 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருந்து சுமார் 130 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள திக்ரித் நகரின் நுழைவு வாயிலில் உள்ள சோதனைச்சாவடி அருகே நேற்று தீவிரவாதிகள் கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தினர். இதில் மாணவிகள் ஐவர், ஒருபெண், பொலிஸார் மூவர் என மொத்தம் 9 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 25 இற்கும் அதிகமானவர்கள் அப்பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

இதேவேளை, நேற்றைய தாக்குதலுக்கு எந்த இயக்கமும் பொறுப்பேற்க முன்வரவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஏ)

## பங்களாதேஷில் இந்துக்கள் வாழும் கிராமங்களில் தாக்குதல்

டாக்கா, நவ.07

பங்களாதேஷில் இந்துக்கள் வாழும் கிராமங்களில் தீவிரவாதிகளால் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் வீடுகள் மற்றும் கோயில்களுக்கு தீ வைக்கப்பட்டது.

பங்களாதேஷில் பெரும்பான்மையாக வாழும் இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. பிராமன் பரியா மாவட்டத்தில் அதிகமாக இந்துக்கள் வசிக்கின்றனர்.

உபாசிலா நகரம் அருகேயுள்ள மத்கயாபரா, தக்ஷின் பரா ஆகிய இந்துக் கிராமங்களில் தீவிரவாதிகள் சிலர் புகுந்து தாக்குதல் நடத்தினர். அதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதற்கிடையே அந்தப்பகுதியில் 7 வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. கோயில்களும் இடித்து சேதப்படுத்தப்பட்டன. இதனால் அங்கு வாழும் இந் துக்கள் கடும் அச்சத்தில் உள்ளனர். இதற்கிடையே அங்கு விரைந்து சென்ற பொலிஸார் வன்முறைக் கும்பலை அடித்து விரட்டினர். அதையடுத்து அந்தப்பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி மத அவமதிப்புச் செய்ததாகக் கூறி அதேபகுதியில் ஒரு கும்பல் தாக்குதல் நடத்தியது. அதில் 100 பேர் காயம் அடைந்தனர். இந்துக்களின் வீடுகள் மற்றும் கோயில்கள் இடித்து அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## துருக்கியில் செய்தியாளர்கள் 9 பேர் கைது!

அங்காரா, நவ.07

துருக்கி அரசுக்கு எதிராக செய்திகள் மற்றும் கேலிச் சித்திரங்கள் வெளியிட்டு வந்த 'கும்ரியத் அல்லதி தி ரிபப்ளிக்' என்ற பத்திரிகையின் செய்தியாளர்கள் 9 பேரை அந்த நாட்டு அரசு கைது செய்துள்ளது.

அந்த நாட்டில் அரசுக்கு எதிராகச் செயற்படும் ஊடகங்கள் மீது எர்டோகன் தலைமையிலான அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் மீண்டும் 9 பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஏ)

## தேர்தலில் பாக்.ராணுவத் தளபதி போட்டியிட வலியுறுத்தி பதாகை




பாகிஸ்தான் ராணுவத் தளபதி ரஹீல் ரிப் அந்த நாட்டின் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தி பதாகைகள்வைக்கப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் அரசுப் பதவிகளை வகித்தவர்கள் ஓய்வுபெற்று இரண்டாண்டுகள் வரை அரசியலில் ஈடுபடக் கூடாது என்ற சட்டம் நடைமுறையில் உள்ளது.

இந்தநிலையில், இந்த மாத இறுதியில் ஓய்வுபெறவுள்ள ராணுவத் தளபதி ரஹீல் ரிப் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தி ராவல்பிண்டி நகரில் புதிதாக பதாகைகள் வைக்கப் பட்டுள்ளன. இது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும், இந்த சட்டத்தை தளர்த்தி பாகிஸ்தான் ராணுவத் தளபதி ரஹீல் ரிப் அந்தநாட்டின் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும். 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்த லில் ரஹீல் ரிப் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தி பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன.

ரஹீல் ரிப்பின் பதவிக் காலத்தை நீடிக்க வேண்டும் என்றும், நாட்டில் மீண்டும் ராணுவ ஆட்சியை கொண்டு வந்துரஹீல் ரிப் ஜனாதிபதியாக வேண்டும் என்றும் சமீபகாலமாக இது போன்ற பதாகைகள் இஸ்லாமாபாத், லாகூர், கராச்சி உள்ளிட்ட நகரங்களில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)




மத்திய தரைக்கடல் வழியாக ரப்பர் படகுகள் மூலம் ஐரோப்பாவுக்குள் ஊடுருவ முயன்ற 2ஆயிரத்து 200 பேரை மீட்டுள்ள இத்தாலியக் கடலோரக் காவல் படையினர், 10 சடலங்களையும் கண்டெடுத்துள்ளனர். (ஏ)

# துப்பாக்கியுடன் நுழைந்த மர்ம நபர்; டிரம்ப் பிரசார மேடையில் சலசலப்பு

வொஷிங்டன், நவ.07

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் பங்கேற்ற பிரசாரக் கூட்டத்தில் துப்பாக்கியுடன் ஒரு மர்ம நபர் ஊடுருவியதால் இரகசிய பொலிஸ் அதிகாரிகள் அவரை அவசரமாக மேடையை விட்டு வெளியேற்றி பாதுகாத்தனர். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது. இதில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளிண்டனும், குடியரசுக் கட்சி சார்பில் டொனால்ட் டிரம்பும் போட்டியிடுகின்றனர். உச்சக்கட்ட பிரசாரத்தில் இருவரும் ஈடுபட்டு உள்ளனர்.

நாடு தழுவிய அளவில் நடத்தப்பட்டுவரும் கருத்துக் கணிப்புகளின் அடிப்படையில் டிரம்ப்பை விட அவரை எதிர்த்து போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் 2-5 ஐந்து சதவீதம்வரை வெற்றிவாய்ப்பு மிக்கவராகக் காணப்படுகிறார்.

இந்த சரிவை சமன்செய்யும் வகையில் டொனால்ட் டிரம்ப் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்தநிலையில், மேற்கு அமெரிக்காவில் உள்ள நெவேடா மாநிலத்தில் உள்ள ரெனோ நகரில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் டொனால்ட் டிரம்ப் நேற்று முன்தினம் இரவு உரையாற்றிக் கொண்டிருந்த போது திடீரென்று மேடையில் தோன்றிய அவரது மெய்ப்பாதுகாவலர்கள் டிரம்பின் உடலை கேடயம் போல் மறைத்தபடி அவரை மேடைக்கு பின்புறமாக அழைத் துச் சென்றனர்.

அதற்குள், மேடைக்கு எதிரே இருந்த ஒருநபரை உள்ளூர் பொலிஸார் கைது செய்து அழைத்துச் சென்றனர். அந்த மர்ம நபர் துப்பாக்கியுடன் பிரசார கூட்டத்துக்கு வந்து டிரம்பை கொல்ல முயன்றிருக்கலாம் என்று பொலிஸ் வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

அந்த மர்ம நபர் கைது செய்யப்பட்டு வானில்ஏற்றிய பின்னர், மிக்க மகிழ்வுடன் மீண்டும் மேடையில்தோன்றிய டொனால்ட் டிரம்ப் தனது உயிரைப் பாதுகாத்தமைக்காக அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு தனது பேச்சைத் தொடர்ந்தார்.

டிரம்ப்பைக் கொல்லும் நோக்கத்தில் வந்த அந்த மர்ம நபர் யார்? இந்த நோக்கத்தின் பின்னணி என்ன? என்பது தொடர்பாக பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (ஏ)

# கல்மடுக் காட்டில் பல இலட்சம் பெறுமதியான பாலை மரங்கள் கடத்தல்; 7 பேர் கைது

## உபகரணங்கள், வாகனமும் சிக்கின



கிளிநொச்சி, நவ.07

கிளிநொச்சி - கல்மடுக்காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட பாலை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பில் சந்தேக நபர்கள் 7பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கல்மடுக் காட்டுப் பகுதியில் உள்ள 5 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்பட்ட சுமார் 50இலட்சத்துக்கும் மேற்பட்ட பாலை மரக் குற்றிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் மரக் கடத்தல் இடம்பெற்றுவரும் நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை மாலை கல்மடுநகர் பகுதியில் உள்ள விமானப்படை அதிகாரிகளின் தகவலை அடுத்து சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

கிளிநொச்சி - முல்லைத்தீவுக்கான பிரதிப்பொலிஸ்மா அதிபரின் விசேட குழுவினரே சுற்றிவளைப்பில் ஈடுபட்டு மரக் குற்றிகளை மீட்டுள்ளனர்.

இதன் போது கல்மடுக் காட்டுப் பகுதியில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்பட்ட பாலை மரங்களே இவ்வாறுசட்டவிரோதமானமுறையில் தறிக்கப்பட்டிருந்தன. மேலும் ஒரு தொகுதி பாலை மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்ட நிலையில் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் சம்பவ இடத்தில் இருந்த 7 பேர் கைது செய்யப்பட்டனர். மரங்களை வெட்டுவதற்கு அவர்கள் பயன்படுத்திய உபகரணங்களும் ஏற்றிச் செல்வதற்குத் தயாராக இருந்த ஒரு வாகனமும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை கிளிநொச்சியில் சட்டவிரோத மரக் கடத்தலுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் கடந்த 3 ஆம் திகதி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிகன்னவின் உத்தரவுக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக, உதவி பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

கிளிநொச்சி - அக்கராயன் காட்டுப் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில், சட்டவிரோதமாக வெட்டப்பட்ட பதினாறு முதிரை மரக் குற்றிகளை கிளிநொச்சி நகர் பகுதிக்கு கொண்டுசெல்வதற்கு உடந்தையாகச் செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இ-49

## நிரந்தர வீடுகள் இன்றி 850 குடும்பங்கள்

பருத்தித்துறை, நவ.07

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இதுவரை மீளக்குடியமர்ந்த 850 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இல்லாமல் அந்தரிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

2010 ஆம்ஆண்டுக்குப்பின்னர் அப்பிரதேசத்தில்5 ஆயித்து 131 குடும்பத்தவர்கள் இதுவரை மீளக்குடியமர்ந்துள்ளார்கள். இவர்களில் 850 குடும்பங்களுக்கே நிரந்தர வீடுகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் நடை முறைப்படுத்தப்படவுள்ள அடுத்த வீட்டுத் திட்டத்தில் 200 குடும்பங்களுக்கு மட்டுமே நிரந்தர வீடுகள் அமைக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இப்பிரதேச மக்கள் 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமியினாலும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற போரினாலும் உயிரிழப்புக்கள், சொத்திழப்புக்கள் ஆகியவற்றைச் சந்தித்த மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-31)

# 'வாழ்வோம் வளம் பெறுவோம்' உதவியில் பயன்பெற்றனர் 36 பயனாளிகள்

வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்படும் வாழ்வோம் வளம் பெறுவோம் செயற்றிட்டத்தின் ஏழாம் கட்டத்தில் வயோதிபர்கள் உள்ளிட்ட36 உறவுகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிறு முற்பகல் பத்து மணியளவில்முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் அமைந்துள்ள மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்ற இச்செயற்றிட்ட நிகழ்வுக்கான பங்களிப்பை ஆஸ்திரேலியாவில் வாழும் புலம்பெயர் அன்பர்கள் வழங்கியுள்ளனர்.

குறித்த நிகழ்வில், நாளாந்த உணவுத் தேவைக்கு இடர்படும் 36 குடும்பத்தவர்கள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கு அரிசியும், கர்ப்பிணித்தாய் ஒருவருக்கு ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்பட்டன.

தற்காலிக வாழ்வுடைமை ஊக்குவிப்பை நோக்காகக் கொண்டு நாளாந்த உணவுத் தேவைக்கு இடர்படும் குடும்பங்களுக்கான உதவி வழங்கலாக வாழ்வோம் வளம் பெறுவோம் என்ற செயற்றிட்டத்தை வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் முன்னெடுத்து வருகிறார்.

தொடர்ச்சியாக ஆறு கட்டங்கள் நிறைவுற்ற நிலையில், இச்செயற்றிட்டத்தின் ஏழாம் கட்டத்துக்கான பங்களிப்பை புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வசிக்கும் கணேசராசா (குபேரன்) குடும்பத்தினர் மற்றும் சிதம்பரகுமரன் குடும்பத்தினர் ஆகியோர் வழங்கினர்.

முப்பத்தாறு பயனாளிகள் உள்வாங்கப்பட்டு இந்நிகழ்வில் மொத்தமாக அறுநூறு கிலோ அரிசியும் கர்ப்பிணித்தாய் ஒருவருக்குப் பண ஊக்குவிப்பும்வழங்கப்பட்டது. (இ-81)



*யாழ். பொலிஸாரினால் அராலி வீதி, 4 ஆம் குறுக்குத்தெருவிலுள்ள 'இணையும் கரங்கள்' சனசமூக நிலையத்தில் நடமாடும் சேவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லே தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்களும், யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களும், சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (இ-19)*

# இலங்கை - பாக். உறவில் விரிசல் ஏதும் இல்லை

கொழும்பு, நவ.07

இலங்கையுடனான பாகிஸ்தான் உறவில் எதுவித விரிசலும் இல்லை என பாகிஸ்தான் தூதுவர் மடவளை தெரிவித்துள்ளார்.

இந்திய - இலங்கை உறவு வலுப்பெற்றுள்ள நிலையில் இந்தியாவுக்கு ஆதரவாக இலங்கை செயற்படுவதாக விமர்சனங்கள் எழுந்துள்ளமை தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இலங்கை - பாகிஸ்தான் இடையே தொடர்ந்து நல்ல உறவு இருந்து வருகிறது. சிறு விடயங்கள் எமது நீண்டகால உறவில் விரிசலை ஏற்படுத்தா. அப்படியான நிலைமைகளை சரி செய்யவே பாகிஸ்தானை பிரதிநிதித்துவப்படுத்தி நாம் இங்கு இருக்கிறோம்.

"இலங்கை - பாகிஸ்தான் நல்லுறவைத் தொடர்ந்து கொண்டு செல்ல நாம் உறுதிபூண்டுள்ளோம்"-என்றார் மடவளை. (இ




*அருந்ததி திருமண சேவை நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் "வரன் தேடுவோம் வாருங்கள்" எனும் நிகழ்வு நேற்று ஞாயிறு முற்பகல் 10 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக " தற்காலச் சூழலில் திருமணம் எதனால் தடைப்படுகிறது" எனும் கருப்பொருளில் சுழலும் சொற்போர் நிகழ்வு இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். (இ*

# சுய பாதுகாப்பைப் பேண தற்காப்புப் பயிற்சி



யாழ்ப்பாணம், நவ.07

யாழ்.மாவட்டத்தில் கிராம மட்டத்திலுள்ள பெண்கள் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தற் காப்புப் பயிற்சி ஒன்று கடந்த 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரையில் யாழ். கன்னாதிட்டி காளி கோயில் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சியை யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் வசந்தம் வின்ட்றஸ்ட் அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

குறித்த பயிற்சிநெறிக்காக சிங்கப்பூரிலிருந்து பயிற்றுவிப்பாளர் வரவழைக்கப்பட்டுப் பயிற்சிநெறிகள் தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெற்றன.

இந்தியாவில் பெண்களுக்கான தற்காப்புக்கலையின் தேசிய விருதைப் பெற்ற துளசி கெலன் இப்பயிற்சியின் வளவாளராகக் கலந்துகொண்டார்.

"பெண்கள் தற்காலத்தைய சூழ்நிலையில் தமக்கான பாதுகாப்பைத் தேடி அலைகின்றார்கள். அவர்கள் செல்லும் ஒவ்வொரு இடங்களிலும் அவர்களுக்கான பாதுகாப்பு குறித்து கேள்வியாகவே காணப்படுகின்றது" என்று பயிற்சியின்போது கலந்துரையாடப்பட்டது.


"யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களிலுள்ள பெண்கள் பெரும்பாலும் இறுதிக்கட்ட யுத்தத்தின் பின்னர் மனரீதியாகப் பாதிப்பை அடைந்தவர்கள்.

தங்களுக்கான பாதுகாப்பு பெண்களிடமே ஒளிந்து கிடக்கின்றது. அவர்கள் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் தம்மை மீள் பரிசோதனை செய்யும் போதே தமது பலம் தாமே என்பதை உணர்ந்து கொள்வார்கள்" என்று மற்றொரு பயிற்றுவிப்பாளர் தெரிவித்தார்.

பெண்களுக்குவரும்பாலியல் ரீதியான தொந்தரவைத் தாமே தான் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வடமாகாணத்தில் உள்ள பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்கள் தம்மை எவ்வாறு பாதுகாப்பது என்பது தெரியாமல் பல பிரச்சினைகளுக்குள் சிக்கி சீரழிந்து போகிறார்கள்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் பயிற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்கள் மூலமாக பாடசாலை, பல்கலைக்கழகங்கள், தொழில் நிறுவனங்கள் போன்ற பல இடங்களுக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள பெண்களுக்குத் தற்பாதுகாப்பு தொடர்பான பயிற்சியை வழங்குவதே எமது நோக்கம் என குறித்த அமைப்பின் பணிப்பாளர் தெரிவித்தார். (இ-7)

# சொந்த மண்ணில் ஆஸ்திரேலியா மண்ணைக் கவ்வுமா?



கன்பரா, நவ.07

ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் டுமினி, எல்கர் ஆகியோரின் சதத்தால் தென்னாபிரிக்க அணி வலுவான நிலையில் உள்ளது. தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் நிலையில் இரு அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி பேர்த்தில் நடைபெற்றது.

இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 242 ஓட்டங்களையும், ஆஸ்திரேலியா அணி 244 ஓட்டங்களையும் எடுத்திருந்தது. அதைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்க அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 104 ஓட்டங்களையும் எடுத்திருந்தது.

இந்நிலையில், மூன்றாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்த தென்னாபிரிக்க அணிக்கு டுமினியும், எல்கரும் சிறப்பான ஆட்டத்தை அளித்தனர். இதன் காரணமாக இருவரும் சதம் கடந்தனர். எல்கர் 127 ஓட்டங்களுடனும், டுமினி 141 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். எல்கர், டுமினி இருவரும் இணைந்து 250 ஓட்டங்களைக் குவித்தனர். ஆஸ்திரேலியா அணிக்கு எதிராக அதிக ஓட்டங்கள் எடுத்த தென்னாபிரிக்கா வீரர்கள் என்ற பெயரைப் பெற்றனர்.

இறுதியாக மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட் இழப்புக்கு 390 ஓட்டங்கள் குவித்து வலுவான நிலையில் உள்ளது. ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக அந்நாட்டு மண்ணில் 388 ஓட்டங்கள் முன் னிலையில் உள்ள தென்னா பிரிக்க அணி இன்னும் 2 நாள்கள் மீதமுள்ள நிலையில் மேலும் வலுவான ஓட்டங்களை எடுத்து ஆஸ்திரேலியா அணிக்கு பெரும் அடியைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயம் சொந்த மண்ணில் தோல்வியை தவிர்க்க ஆஸ்திரேலியா அணி சிறப்பாகச் செயற்படும் என்பதால் போட்டியில் பரபரப்பு இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# இந்திய அணிக்கு சவாலாக இருப்போம்

## இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ்டயர் குக்



மும்பை, நவ.07

டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இந்திய அணிக்கு சவாக இருப்போம் என்று இங்கிலாந்து அணித் தலைவர் குக் கூறியுள்ளார்.

இந்தியாவுக்குச் சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது. இது தொடர்பில் இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ்டயர் குக் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையில்,

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் எங்களுக்கு கடுமையான சவாலாகும். எப்போதுமே உலகின் முதல்தர அல்லது இரண்டாவது அணிகளுக்கு எதிராக அதுவும் நன்கு பழக்கப்பட்ட அவர்களது சொந்த இடத்தில் எதிர்கொள்வது மிகப்பெரிய பணியாகும். எங்கள் அணியில் உள்ள வீரர்கள் இந்திய துணைக் கண்டத்தில் அதிகமான போட்டிகளில் விளையாடியதில்லை. அதனால், அவர்களுக்கு பலமான சவால் காத்திருக்கிறது.

பெரிய போட்டிகளில் எத்தகைய சவால்கள் இருந்தாலும், அதைச் சமாளிக்க ஒன்று இரண்டு வீரர்கள் நிலைத்து நின்று சிறப்பாகச் செயற்பட்டால் போதும். அது தான் இப்போது எங்கள் முன் இருக்கும் சவாலாகும்.

இந்தியாவுடன் ஒப்பிடும் போது எங்களை பின்தங்கிய அணியாகக் கருதினாலும், சவாலான அணியாக இருப்போம் என்று தெரிவித்துள்ளார்.

# இந்திய மகளிர் ஹொக்கி சம்பியன்



சிங்கப்பூர் சிற்றி, நவ.07

சிங்கப்பூரில் நடைபெற்று வந்த ஆசிய மகளிர் சம்பியன்ஸ் கோப்பை ஹொக்கி தொடரில் சீனாவை வீழ்த்தி இந்தியா சம்பியன் பட்டம் வென்றது

பெண்களுக்கான ஆசிய சம்பியன்ஸ் கோப்பை ஹொக்கி தொடர் சிங்கப்பூரில் ஆரம்பமாகியது. லீக் மற்றும் நொக்அவுட் சுற்றுக்கள் முடிவில் இந்தியா மற்றும் சீன அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

இன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் இரு அணிகளும் சம்பியன் பட்டத்துக்காக பலப் பரீட்சை நடத்தின. இதில் இந்திய பெண்கள் அணி 2-1 என சீன அணியை வீழ்த்திச் சம்பியன் பட்டம் வென்றது. ஒரு கட்டத்தில் 1-1 என ஸ்கோர் சமநிலையில் இருந்தது. ஆட்டம் முடி வடைவதற்கான கடைசி நிமிடத்தில் இந்திய வீராங்கனை தீபிகா கோல் அடிக்க இந்தியா 2-1 என சீனாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

ஆண்களுக்கான ஆசிய சம்பியன்ஸ் கோப்பை ஹொக்கி தொடரில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா சம்பியன் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

# முதலிடத்தைப் பிடித்தார் அண்டி முர்ரே



பாரிஸ் டென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு முன்னேறியதன் மூலம் அண்டி முர்ரே, தரவரிசையில் முதல் முறையாக முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.


அந்த இடத்தில், 2 ஆண்டுகளாக அசைக்க முடியாத வீரராக இருந்த ஜோகோவிச், கால் இறுதியில் அதிர்ச்சித் தோல்வியை சந்தித்தார். கால் இறுதிப் போட்டியில் செர்பியாவின் ஜோகோவிச், 9 ஆம் நிலை வீரரான குரோஷியாவின் மரின் சிலிச்சை எதிர்த்து விளையாடினார்.

இதில், ஜோகோவிச்சை திணறடித்த சிலிச் 6-4, 7-6 என்ற நேர் செட்களில் வென்று அதிர்ச்சி அளித்தார். மற்றொரு கால் இறுதியில், 2 ஆம் நிலை வீரராக இருந்த இங்கிலாந்தின் அண்டி முர்ரே 7-6, 7-5 என்ற நேர் செட்களில் செக்குடியரசின் தோமஸ் பெர்டிச்சை வென்றார்.

அரை இறுதிக்கு முன்னேறிய முர்ரே, ஒரு வெற்றி பெற்றால் முதல் இடத்தைப் பிடிக்கலாம் என்ற நிலை இருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் அரை இறுதியில் அண்டி முர்ரேவை எதிர்த்து விளையாட இருந்த கனடாவின் மிலோஸ் ரயோனிச் காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

இதனால், முர்ரே இறுதிப் போட்டிக்கு முன்னேறியதுடன், தரவரிசையில் முதல் இடத்தைப் பெற்று மகுடம் சூடினார்.

# வருகிறார் அண்டர்சன்



ராஜ்கோட், நவ.07

இங்கிலாந்து அணியின் அனுபவ வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன், காயத்திலிருந்து குணமடைந்துள்ளதால் இந்தியாவுக்கு எதிரான 2 ஆவது டெ[illegible] போட்டியில் களமிறங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது மகிழ்ச்சியான செய்தி என அந்த அணியின் தலைவர் அலஸ்டர் குக் கூறியுள்ளார்.

வங்கதேச சுற்றுப் பயணத்தின் போது, இங்கிலாந்து அணியின் நட்சத்திர வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சனுக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனால், இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டுக்கான 16 பேர் கொண்ட அணியில் அவர் இடம் பெறவில்லை. இதற்கிடையே, அண்டர்சன் தற்போது காயத்திலிருந்து முழுமையாகக் குணமடைந்து வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுத்துறைச் சங்கங்களில் அரசியல்வாதிகள் பதவி வகிக்கக் கட்டுப்பாடு

இலங்கையில் விளையாட்டுத்துறைச் சங்கங்களில் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு அரசியல்வாதிகள் போட்டியிடுவதாக இருந்தால் அவர்கள் குறிப்பிட்ட விளையாட்டில் தேசிய மட்டத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முதல் தரக் கழகங்களில் விளையாடியிருத்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலக்கம் 1990/23 மற்றும் 2016.10.27ஆம் திகதி விளையாட்டுத்துறை ஒழுங்கு விதிகளுக்கு அமையவே விளையாட்டுத் துறைச் சங்கங்களின் நிர்வாக உத்தியோகத்தர்கள் போட்டியிட அனுமதிக்கப்படுவர் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கட்டளைகள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 27ஆம் திகதி அரசினால் வெளியிடப்பட்டது.

இந்தக் கட்டளைகளுக்கு அமைய விளையாட்டுத் துறைச் சங்கங்களில் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு



அரசியல்வாதிகள் போட்டியிடுவதாக இருந்தால் அவர்கள் குறிப்பிட்ட விளையாட்டில் தேசிய மட்டத்தில் அல்லது முதல்தர கழக மட்டத்தில் விளையாடியிருக்க வேண்டும் என்ற ரத்து ஒழுங்குவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இனிமேல் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் விளையாட்டுத்துறைச் சங்கங்களில் நிர்வாக உத்தியோகத்தர் பதவியை வகிக்க முடியாதவாறு விளையாட்டுத்துறை ஒழுங்குவிதி திருத்தப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் விளையாட்டுத்துறைச் சங்கங்களில் பொருளாளர் பதவி வகிப்பவர்கள் கணக்காய்வு நிறுவன உறுப்பினராக இருப்பதும் அதற்கான சான்றிதழை அவர்கள் சமப்பிக்கவேண்டியதும் புதிய ஒழுங்கு விதிகளில் அத்தியாவசியமாக்கப்பட்டுள் ளன என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

சர்வதேச ஒலிம்பிக் குழுவுடன் கடந்த செப்ரெம்பர் மாதம் வியட்நாமில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கையின் விளையாட்டுத்துறை ஒழுங்கு விதிகளைத் திருத்தியமைப்பது குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் விளையாட்டுத்துறை சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய சில மாதகால அவகாசம் கோரப்பட்டு அதற்கு சர்வதேச ஒலிம்பிக் குழு இணங்கியதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் தானும் தேசிய ஒலிம்பிக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், 1973 விளையாட்டுத்துறைச் சட்டவிதிகள் திருத்தப் படுவதற்கு சகல விளையாட்டுத் துறைசங்கங் களும் இணங்கி யுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம் 2016




# 30 ஓவர் போட்டிகளில் கே.சி.சி.சி. முதலிடம்

ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்கான அணித் தேர்வில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 7 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித்தெரிவு 01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரை நடைபெற்றது.

37.30 ஓவர் போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் 8 போட்டிகளில் பங்குபற்றி 06 போட்டிகளில் வெற்றிபெற்று 45.01 புள்ளிகளைப் பெற்று 1 ஆம் இடத்தில் உள்ளது.

சென்றலைட்ஸ் அணி 6 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றி பெற்று 34.68 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தில் உள்ளது.

ஹாட்லியைற்ஸ் அணி 6 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 25.38 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்தில் உள்ளது.

ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 4) திருநெல்வேலி சி.சி. | 24.04 | (05 /03) |
| 5) ஸ்கந்தா ஸ்ரார்ஸ் | 18.30 | (04/02) |
| 6) ஜொலிஸ்ரார் | 17.57 | (06/01) |
| 7) யாழ். ஜொனியன்ஸ் | 17.10 | (04/02) |
| 8) யாழ். பல்கலைக்கழகம் | 16.87 | (03/03) |
| 9) ஸ்ரான்லி | 16.85 | (04 /02) |
| 10) சிறிகாமாட்சி | 12.55 | (03/ 02) |
| 11) கிறாஸ்கொப்பர்ஸ் | 12.24 | (02 /01) |
| 12) யாழ்.சென்றல் | 12.23 | (03/ 01) |
| 13) ஓல்ட் கோல்ஸ் | 10.08 | (02 /01) |
| 14) ரிறிபேக்ஸ்ரார் | 7.88 | (02 /01) |
| 15) விங்ஸ் | 4.75 | (02 / 00) |
| 16) றெயின்போ | 2.62 | (01/00) |
| 17) யூனியன்ஸ் | 2.41 | (01/00) |
| 18) திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ | 2.27 | (01/ 00) |
| 19) அரியாலை சென்றல் | 2.23 | (01/00) |
| 20) நியூஸ்ரார்ஸ் | 2.00 | (01/00) |
| 21) பற்றீசியன்ஸ் | 1.89 | (01/00) |

# கடல்மீன்கள் விளையாட்டுக் கழகம் வெற்றி



மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கமும் மாவட்ட கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும் இணைந்து நடத்திய ஜி.டபிள்யூ. பிரபாகரன் ஞாபகார்த்த கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கல்லடி கடல்மீன்கள் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட 'ஏ' பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்றுவந்த இந்த நொக்கவுட் முறையிலான சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி புதிய டச்பார் இக்னேசியஸ் விளையாட்டுக் கழகமும் கல்லடி கடல் மீன்கள் விளையாட்டுக் கழகமும் இப்போட்டியில் மோதின.

நிர்ணயிக்கப்பட்ட நேர ஆட்டத்தில் எந்த அணியும் கோல் புகுத்தவில்லை. அதன்பின் பெனால்டி உதை மூலம் கடல்மீன்கள் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி, இந்த ஆண்டுக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இந்தப் போட்டியின் சிறந்த வீரராக இக்னேசியஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பி.அஸ்மோ தெரிவு செய்யப் பட்டதுடன் சிறந்த கோல் காப்பாளராக கடல் மீன்கள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜீவராஜ் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் அச்சுவேலி யூத் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இடம்பெற்று வருகின்றது. அதில் 'ஏ' பிரிவுக்கான அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் பலப் பரீட்சையில் ஈடுபட்டன. இந்தப் போட்டியில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றுள்ளது.



# யாழில் சர்வதேச கிரிக்கெட் அரங்கு



## கோயிலாக்கண்டியிலா? மண்டைதீவிலா?

சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம் ஒன்றை யாழில் அமைப்பதற்கு தகுந்த இடத்தை இனங்காணும் நோக்கில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபையின் குழு ஒன்று யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தது.

இந்தக் குழுவில் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் பொருளாளர் சமி சில்வா, ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தேசிய அபிவிருத்தி உப குழுவின் தலைவர் கமல் தர்மஸ்ரீ ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இவர்களுடன் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் க.தர்மலிங்கம், செயலாளர் செ. விமலதாஸன் ஆகியோர் தலைமையிலான குழுவினரும் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தின் கோயிலாக் கண்டி, மண்டைதீவு ஆகிய பிரதேசங்கள் சர்வதேச கிரிக்கெட் அரங்கு அமைப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டன. இந்த இரண்டு பிரதேசங்களில் ஏதாவது ஒரு பிரதேசத்தில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் அரங்கு நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதேவேளை, மல்லாகம் பிரதேசத்திலுள்ள ஸ்ரீபாஸ்கரா விளையாட்டு மைதானத்தை யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்திற்கான மாவட்ட கிரிக்கெட் அரங்காக நிர்மாணித்துத் தருவதாகவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் குழு உறுதியளித்துள்ளது.

# முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கப் போட்டி முடிவுகள்



வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கப் போட்டிகள் நேற்று முன்தினமும் நேற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்று முடிந்தன.

இந்தச் சுற்றுப் போட்டிகள் எட்டு வெவ்வேறு வயதுப் பிரிவுகளில் ஆண்களுக்குத் தனியாகவும் பெண்களுக்குத் தனியாகவும் நடத்தப்பட்டன.

வடக்கு மாகாணத்திலுள்ள பன்னிரண்டு கல்வி வலயங்களிலிருந்தும், ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியர் இந்த இறுதிச் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இறுதிச் சுற்றுப் போட்டிகளில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியர் விபரம் வருமாறு,

**ஆண்கள்**

ஆறுவயதுப் பிரிவு– எஸ்.காவியன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), என்.நிருஜன் (யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), ஜீ.அர்விந் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை).

எட்டு வயதுப் பிரிவு– ஏ.தரன் (யாழ்.சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்), ஜே.பவானன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), ஜி.தனுசிகன் (யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை).

பத்து வயதுப் பிரிவு– ஏ.அருத்திரன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ். அபிமன்யு (யாழ்.உடுப்பிட்டி அ.மி.த.க. பாடசாலை), எஸ். அபிஷேக் (யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி).

பன்னிரண்டு வயதுப் பிரிவு– எம்.சஞ்ஜயன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஜே. ஆரகன் (யாழ். இந்துக் கல்லூரி), ஜே. ஆர்த்திகன் (யாழ்.இந்துக் கல்லூரி).

பதின்நான்கு வயதுப் பிரிவு– எஸ். மதுரங்கன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), வி.சாகித்தியன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), வி. டிசாந்தன் (கிளி. கிளிநொச்சி மகாவித்தியாலயம்).

பதினாறு வயதுப் பிரிவு– ஆர்.தனுஷன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), எஸ். சிவதனுஜன் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். அனுஜன் (யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி).

பதினெட்டு வயதுப் பிரிவு– ஜீ.யூட் டொறிஷன் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), ஏ. அஜிஸ்ரீயன் (யாழ். இந்துக் கல்லூரி), ஆர்.உதயதர்ஷன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி).

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர்– ரீ. பிரம்மன் (யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.வித்தகன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), ஆர். மதுஷன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி).

**பெண்கள்**

ஆறு வயதுப் பிரிவு– எஸ்.விபூஷனா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), கே. லதுர்கிகா (கிளி. மாசார் அரச தமிழ் கலவன் பாடசாலை), பி.சபிகா (யாழ். மாணிக்க வாசகர் வித்தியாலயம்).

எட்டு வயதுப் பிரிவு– எஸ்.அஷ்வினியா (யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), என்.நதி (யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.அனன்யா (யாழ்.சுண்டிக்குளி மகளீர் கல்லூரி).

பத்து வயதுப் பிரிவு– ஜே.மகிழிசை (யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), பி.ஆரணி (நெல்லியடி எம்.எம்.ரீ.எம். எஸ்), சி.ரி. கிறிஸ்ரீனா அனுஜிதா (யாழ். சென். ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்).

பன்னிரண்டு வயதுப் பிரிவு– எஸ்.ஆரபி (யாழ்.வேம்படி மகளீர் பாடசாலை), என்.தரினிகா (யாழ்.வேம்படி மகளீர் பாடசாலை), எம்.சௌமியா (யாழ்.வேம்படி மகளீர் பாடசாலை).

பதின்நான்கு வயதுப் பிரிவு– பி.தமிழினி (யாழ்.வேம்படி மகளீர் பாடசாலை), கே. சாகித்தியா (யாழ். மகாஜனாக் கல்லூரி), எம். சோபிதா (யாழ்.வேம்படி மகளீர் பாடசாலை).

பதினாறு வயதுப் பிரிவு– ஆர். லக்ஷிகா (யாழ்.வேம்படி மகளீர் பாடசாலை), எஸ். ஆர்திகா (யாழ். வல்வை மகளீர் மகா வித்தியாலயம்), ஆர்.கம்சாஜினி (யாழ்.வேம்படி மகளீர் பாடசாலை).

பதினெட்டு வயதுப் பிரிவு– யு.சுமித்திரா தேவகி (யாழ். இந்து மகளீர் கல்லூரி), எல். லாவன்ஜா (யாழ்.வேம்படி மகளீர் பாடசாலை), எஸ். கபிர்தனா (யாழ்.இந்து மகளீர் கல்லூரி).

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர் பிரிவு– ஆர்.பிரபாலினி (யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை), எஸ்.சுபலக்ஷ்மி (யாழ். இந்து மகளீர் கல்லூரி) என்.தனுசபிரியா (யாழ். இந்து மகளீர் கல்லூரி),



## வடக்கு மாகாணசபை இனப்பாகுபாடு எதுவுமின்றி பணிகளை முன்னெடுக்கிறது

*வன்னி மாவட்டத்தின் காதர் எம்.பி. புகழாரம்*



தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற இனப்பாகுபாடு எதுவுமின்றி வடக்கு மாகாண சபை தனதுபணிகளைமுன்னெடுத்து வருகின்றது எனப் புகழ்ந்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான்.

வவுனியா முஸ்லிம் மக்களின் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

கடந்த காலங்களில் தமிழர்களின் நிகழ்வுகளுக்கு முஸ்லிம்கள்அழைக்கப்படுவதுமில்லை, முஸ்லிம்களின் நிகழ்வுகளுக்கு தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதுமில்லை. ஆனால்அவ்வாறான நிலை இப்போதுவன்னி மாவட்டத்தில் இல்லை என்பதை நாம் ஏனையவர்களுக்கு புரிய வைத்திருக்கிறோம்.

இங்கு சிலர் இனவாத அரசியல் செய்ய நினைக்கிறார்கள், ஆனால் நாங்கள் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்றபாகுபாட்டைகளைந்துஇதயசுத்தியுடன்செயற்படுகின்றோம்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் வடமாகாண சபைஅமைச்சர்கள்உறுப்பினர்கள், தமிழ், முஸ்லிம் மக்கள் எனப் பலர்கலந்துகொண்டனர்.

## படுகொலை செய்யப்பட்ட சிங்கள...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் நிமலராஜனின்16ஆவதுஆண்டுநினைவு தினம் கடந்த மாதம் நினைவு கூரப்பட்டது.நிமலராஜனில்ஆரம்பமாகி இந்த 16 வருட காலத்தில் சுமார் 40 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் இலங்கை முழுவதிலும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்அல்லது காணாமற்போயிருக்கின்றார்கள் எனக் கணிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.இதில்3பேரைத்தவிர்ந்த ஏனைய அனைவருமே தமிழர்கள்.இவ்வாறுகொல்லப்பட்டஊடகவியலாளர்கள்தொடர்பில்விசாரணைகள் எதுவும் முன்னைய ஆட்சியில் நடத்தப்பட்டு, குற்றவாளிகள்நீதியின்முன்பாகநிறுத்தப்படவில்லை. அவர்கள் அவ்வாறுசெய்வார்கள்என்றநம்பிக்கையும்அப்போதுஇருக்கவுமில்லை. கடந்த (2015) ஜனவரியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது, ஊடகவியலாளர்கள் கொலைகள்தொடர்பில்விசாரணைநடத்தப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஆனால், இரண்டு சிங்கள ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பான விசாரணைகளை மட்டுந்தான் புதிய அரசாங்கம்மீள்விசாரணைக்கு எடுத்துள்ளது. தமிழ் ஊடகவியலாளர்களின்கொலைகள்தொடர்பில் எந்தவிதமான விசாரணையும் இல்லை என்ற நிலைதான் தொடர்கின்றது.

இதுதொடர்பில்தமிழ்ஊடகத்துறைசார்ந்தவர்கள்அரசாங்கத்திடம் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். கடந்த மார்ச் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஊடகத்துறை அமைச்சர் கயந்தகருணாதிலக்கவுடன்நடத்திய பேச்சுக்களின் போதும் இது தொடர்பில்அவரிடம்நான்சுட்டிக்காட்டியிருந்தேன்.கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும், குற்றவாளிகள் சட்டத்தின் முன்பாகநிறுத்தப்பட்டு,பலியானஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும்என்பதைநான் வலியுறுத்தியிருந்தேன்.ஆனால், இதுவரையில்அதற்கானநடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமலிருப்பதையிட்டு என்னுடைய அதிருப்தியை இந்த இடத்தில் நான் தெரிவிக்க விரும்புகின்றேன். தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஒருநீதிசிங்களஊடகவியலாளர்களுக்கு இன்னொரு நீதி என்ற நிலைதொடர்ந்தால்நல்லிணக்கத்தையும் நம்பிக்கையையும் எவ்வாறுகட்டியெழுப்ப முடியும்?

எனவே,எமதுநிலைகவலைக்கிடமாக இருக்கும் நேரம் இது. ஆரோக்கியமான,துணிச்சலான ஆனால் சூட்சுமமான பங்களிப்பை வழங்க இன்றைய பத்திரிகையாளர்கள்திரு.தனபாலசிங்கத்திடம்இருந்துபலதையும்கற்க இருக்கின்றது. நேற்று அவர் பேசும் போது மேலும் ஒரு கருத்தைத் தெரிவித்தார்.

எஸ்.டி.சிவநாயகம் போன்றோரின் காலம் மலையேறி விட்டது. அவர்களிடம் இருந்து கற்று இன்று சிரேஷ்ட நிலை அடைந்திருக்கும் கானமயில்நாதன், வித்யாதரன் போன்றோரின் பெயர்களையே இனி நாங்கள் உச்சரிக்க வேண்டும் என்றார். அந்த வரிசையில் வாழ்நாள் சாதனையாளர் தனபாலசிங் கம் அவர்களின் பெயரையும் உள்ளடக்க வேண்டும் என்று கூறி என்னை அழைத்த அனைவருக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

# கூட்டு எதிர்க்கட்சி எம்.பிக்கள் புதிய கட்சியில் சேரவில்லையாம்

## சொல்கிறார் அக்கட்சியின் செயலாளர் பீரிஸ்

கூட்டுஎதிர்க்கட்சியில்இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இணையாமல் இருக்கக் காரணம் அக்கட்சியில் இருந்து நீக்கப்படுவோம் என்ற அச்சமே.

புதிதாக உருவான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் செயலாளர் ஜீ.எல். பீரிஸ் தனியார் தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றுக்கு நேற்றிரவு, அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு விளக்கமளித்தார்.

புதிய கட்சியின் கிளைகளை நாடு முழுவதும் பரப்பும் நடவடிக்கையில் முன்னாள் அமைச்சரான பஸில் ராஜபக்ஷ செயற்படுகிறார். கூட்டு எதிர்க்கட்சியில் உள்ள 52 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்னமும் புதிய கட்சியில் அங்கத்துவம் பெறவில்லை.

இதற்கு அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டு விடுவார்கள் என்ற அச்சமே காரணம்.

மேலும் இந்தக் கட்சியின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பை ஏற்பார் என வாக்குறுதி அளிக்கவில்லை என்றும் இதன்போது பீரிஸ் கூறினார்.

# ஊடகங்கள் சத்தமிடுவதிலும் வரையறை இருக்கவேண்டும்

## - பிரதமர் ரணில் -

கூட்டரசாங்கத்தில்இருபெரும் கட்சிகள் இணைந்து செயற்படுவது ஊடகங்களுக்கே இன்று பெரும் பிரச்சினையாகவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசனம் வெளியிட்டுள்ளார்.

ஊடகங்கள் விளக்கமில்லாமல் வீணாக சப்தமிடுவதிலும் வரையறையொன்று தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

அடுத்தவருடம்ஜனவரிமாதம் முதல் ஊடகங்களை அழைத்து விளக்கமளிக்கவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அஹங்கமபிரதேசத்திலுள்ள விகாரையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில்கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் இன்று விழும், நாளை விழும் என ஊடகங்கள் எதிர்பார்த்துள்ளன. இந்த அரசாங்கம் 5 வருடங்களுக்கு விழாது என்பதை ஊடகங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். ஊடகங்கள் கொண்டிருக்கின்ற கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். இருபெரும் கட்சிகள் இணைந்துசெயற்படுவதன் பிரதிபலன் அடுத்த வருடத்தில் வெளிப்படஆரம்பிக்கும். இதனை விளங்காதவர்கள் அரசாங்கம் விழும் எனக் கனவு காண்கின்றனர். – என்றார். (ம)

# கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடங்குவர்எனக்கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் சமூக விரோத செயற்பாடுகள் அண்மைக் காலமாகஅதிகரித்திருந்தன. இவை குறித்து ஜனாதிபதியின் விசேட கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதையடுத்து ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குவிரைந்தபயங்கரவாத தடுப்புப் பிரிவைச்சேர்ந்த பொலிஸார் இரகசியமாகத் தகவல்களைதிரட்டிஅதிரடிநடவடிக்கைகளில் இறங்கினர்.

இதன் போதுயாழ். நகரின் பிரபல ஹோட்டலில் பணியாற்றிய இளைஞர் ஒருவர் கைதானார்.அவரிடம் பெறப்பட்ட வாக்கு மூலங்களுக்குஅமைவாககொக்குவில்,திருநெல்வேலி பகுதிகளைசேர்ந்த இரு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.இவ்வாறுகைதானவர்களில் ஒருவர் அரசியல் கட்சி ஒன்றின் அலுவலகத்தில் வைத்தே கைது செய்யப்பட்டார் எனத் தெரியவருகின்றது.

இக்கைதுகளைத்தொடர்ந்து உடுவில் பகுதியில் வைத்து இருவரும்,மருதனார்மடப்பகுதியில் வைத்துஒருவரும்விசேடபொலிஸாரின் உதவியுடன் கைது செய்யப்பட்டனர். இவர்களில் ஒருவர் இராணுவத்தை சேர்ந்தவர் என்றும் சிவில் உடையில் ஆயுதத்துடன்நடமாடியபோதே அவர் கைது செய்யப்பட்டார் என்றும் ரி.ஐ.டியினர் தெரிவித்தனர்.

மேலும் கைதானவர்களில் ஒருவர் தவிரஏனையோரின் குடும்பத்தினருக்கு அவர்களை கைதுசெய்தமைக்கான சான்றாதாரங்கள்வழங்கப்பட்டுள்ளன என்றும் சான்றாதாரம் வழங்காது கைது செய்யப் பட்டவரை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு அடையாளம் காட்டியுள்ளனர் என்றும் தெரிவித்தனர்

# அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டோமோ அதனைத்தான் இப்போதும் கேட்கின்றோம். மக்களுக்கு நாம் கொடுத்த வாக்குறுதியிலிருந்து அல்லது மக்கள் எமக்குக்கொடுத்த ஆணையிலிருந்துநாம் பின்வாங்க முடியாது.

மேலும் அரசமைப்புப் பேரவையில் இடம்பெறும்நகர்வுகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுப்பனவையாக அமையவில்லை. பௌத்த மதத்துக்கு முன்னுரிமைகொடுப்பதா இல்லையா என்பதிலேயே தெளிவற்ற நிலைதான் உள்ளது. சிறுபான்மையினரை இரண்டாந்தரப்பிரஜைகளாகத்தான் பிரதானகட்சிகள் மதிக்கின்றன என்பதற்கு இது ஓர் உதாரணம். இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதில் பல தடைகளைத் தாண்டிச்செல்லவேண்டிய தேவையும் உள்ளது. நாடாளுமன்றத்தில் மூன்றில்இரண்டுபெரும்பான்மை தேவை. அதற்கடுத்த தாக சர்வஜன வாக்கெடுப்பு என்ற தடையும் உள்ளது. இவை அனைத்தையும் தாண்டி நியாய மான ஒரு தீர்வு கிடைத்தால் நாம் அதனை நிச்சயமாக வரவேற்போம். ஆனால் அதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றனவா? அதனை நாம் எவ்வாறு உருவாக்கப்போகின்றோம்? வெறுமனே மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்துக் கொண்டிருப்பதால் என்ன பலன்?

-இவ்வாறு அங்கு கேள்வி எழுப்பினார் முதல்வர்.

(இந்நிகழ்வில் முதல்வர் ஆற்றிய உரையின் ஏனைய அம்சங்கள் 3 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.)

# பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீதரத்னம் தெரிவித்துள்ளார்.

நபர்களைகடத்திசென்றுசித்திரவதை மேற்கொண்டமை இந்த ஆண்டிலும் இடம்பெற்றதாக புதிதாகமேலும்சாட்சிகள்கிடைத்துள்ளன.

எதிர்வரும் வாரத்தில் இருந்து ஒரு மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள அனைத்து சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் குழு, இலங்கை தொடர்பில் மேற்கொண்ட விசேட ஆய்வின் போதே இந்தத் தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.பிரிட்டிஷ் குடிமகனான, சித்திரவதைக்குள்ளான ரேணுகாரூபன் இலங்கையில் துன் புறுத்தல்களுக்குள்ளான சந்தர்ப்பத்தில்அவரதுபாதுகாப்புக்கான விடயத்தில் தலையிடாத குற்றச்சாட்டிற்காக பிரித்தானிய வெளியுறவு அமைச்சுக்கு எதி ராகவும் வழக்கு தொடரவுள்ளதாக வழக்கறிஞர் கீரத்னம் தெரிவித் துள்ளார்.

வழக்கறிஞர்கள்,மனிதஉரிமை செயற்பட்டாளர்களின் தலையீட்டின் பின்னர் விடுதலை யாகி லண்டன் நோக்கி சென்ற ரேணுகாரூபனை பரிசோதித்த விசேட வைத்தியர்கள், அவரது மூளைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்தமையினால் தனது சகோதரனின் தலை, முகம், வலது காலில் காயங்கள் ஏற்பட்டுள்ளன என அவரது தங்கை லலிதாரூபி வேலாயுதபிள்ளை, இலங்கை ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டார்.

ஜூலைமாதத்தின் ஆரம்பத்தில் பிரித்தானியா நோக்கி சென்ற ரேணுகாரூபன் உடனடியாக சிகிச்சை பெறுவதற்காக அரசாங்க வைத்தியசாலைக்கு சென்றபோது அவருக்கு வழங்கப்பட்டவைத்திய அறிக்கையில், கைதுசெய்யப்பட்டுதாக்குதலுக்குள்ளான அவருக்கு வெட் டுக்காயங்கள் மற்றும் இரத்தக் கட்டி தழும்புகள்பலகாணப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரது சகோதரி லலிதாரூபி பாதுகாப்பு பிரிவினால் இரண்டு முறை கைது செய்யப்பட்டதன் பின்னரே பிரித்தானியாவுக்கு தப்பிசென்றுள்ளார். அவர் கூறுவதற்கமைய ஜூன் மாதம் 2ஆம் திகதி மாலைகொடிகாமம்பொலிஸாரே அவர்களின் வீட்டிற்கு நுழைந்து அவரது சகோதரரை கைது செய்துள்ளனர்.

அவர் கடத்திசெல்லப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி ஆலோசகரும் கிழக்கு மாகாண ஆளுநருமானஒஸ்டின்பெர்ணாண்டோ மற்றும் யாழ்ப்பான இராணுவத் தளபதிமேஜர்ஜெனரல்மஹேஷ் சேனாநாயக்கஉட்பட அரசாங்க அதிகாரிகளிடம்சர்வதேசமனித உரிமை அமைப்பாளர்கள் வினவியுள்ளனர்.

பிரிட்டிஷ்வெளியுறவுஅமைச்சுக்கும், சர்வதேச மன்னிப்பு சபைக்கும் கடத்தப்பட்டமை தொடர்பில்அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்ரேணுகாரூபன்கைது செய்யப்பட்டமையை ஒஸ்டின் பெர்ணான்டோவினால் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டதாக லலிதா ரூபியின் வழக் கறிஞர் மெலனி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சித்திரவதைக்குட்பட்டு கடுமையான காயமடைந்த ரேணுகாரூபன் வேலாயுதபிள்ளை கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுகளை சுமத்தி ஜூன் மாதம் 17ஆம்திகதிவரைவிளக்கமறியலில்வைக்கப்பட்டரேணுகாரூபன் வேலாயுதபிள்ளைக்காகவழக்கறிஞர் அன்ரனி புனிதநாயகம் ஆஜராகியதன் பின்னர் அவர் விடுதலையாகி ஜூலை மாதம் 7ஆம் திகதி பிரிட்டிஷ் நோக்கி சென்றுள்ளார்.

அரசாங்கத்தின் பாதுகாப்பு பிரிவு மற்றும் பொலிஸார் இந்த அரசாங்கத்தின்கீழ்சித்திரவதையில் ஈடுபடுவதாக சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு அமைப்பு மற்றும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஆகியன ஐக்கிய நாடுகள் சபைக்குமுழுமையானஅறிக்கை ஒன்றை வழங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றிய சமயம் முதல்வர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

“தம்பி மாவையைக் காணும் போதும் இந்த மனோநிலை என்னைப்பீடித்திருக்கும். அப்பொழுதெல்லாம் இதற்கான பாவம் அண்ணன் சம்பந்தனையே சாரும்என்று மனதைத் தேற்றிக் கொள்வேன்” –என்றும்முதல்வர் விக்கி அங்கு சொன்னார்.

அப்போது, அந்நிகழ்வின் சபையில் முதல் வரிசையில் – முதல்வர் விக்னேஸ்வரனின் முகத்துக்கு நேரே – மாவை. சேனாதிராஜா எம்.பி.யும் பார்வையாளராக அமர்ந்திருந்தார்.

முதல்வர் விக்கியின் அந்தப் பேச்சினால் தமக்கு ஏற்பட்ட சீற்றத்தை நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளைத் திறப்பு விழாவின் போது மனந்திறந்து கொட்டினார் மாவை சேனாதிராஜா.

“நாங்கள் போராட்ட வாழ்வோடு வாழ்ந்தவர்கள். போராட்டத்தின் மூலம் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வேண்டும், எமது மக்களுக்குஏதேனும்செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பம். எனக்கு அந்தப் பதவிக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பமோ, கருத்தோ இருந்ததில்லை. அது எல்லோருக்கும் தெரியும்” – என்றார் மாவை.

“சிலர்திரும்பத்திரும்பஅந்தப் பேச்சைப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அவரது பேச்சு எனது மனதுக்கு மிகப் பாதிப்பாக இருந் தது. வித்தியாதரனைக்குறிப்பிட்டுபின்னர்அவர் எனதுபெயரைக்குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை.

“இந்தவிடயத்தில்நான்எப்படி நடந்து கொண்டேன் என்பதை எமது தலைவரே (சம்பந்தன் அவர்களே) தெளிவாகச் சொல்லிவிட்டார்.

“நாம்நேரடியாகப் பங்கேற்ற தேர்தலில்கூடஉழைக்காதஅளவுக்கு – அவருக்காக – அவர் முதலமைச்சராக–வருவதற்காக நாம் உழைத்தோம்.

“ அதன் பின்னர் அவரைச் சந்தித்துப் பேசியபோது ‘மாவை நீங்கள் எனக்கு உதவியாக இருக்கவேண்டும்’–என்று அவர் சொன்னார். ஆனால் அதற்குப் பிறகு ஒரு நாளாவது அவரை அழைத்துப்பேசுவதற்கு சந்தர்ப்பமே கிடைக்கவில்லை.

‘‘தலைவரே ஒரு தடவை என்னிடம் கூறினார். ‘நீங்கள் அறிமுகப்படுத்தித்தானே நீதியரசர் விக்னேஸ்வரனாக இருந்தவரைஎனக்குத்தெரியும்’என்று.

“அதுஉண்மை. அவைபற்றி இனியும் பேசுவதற்கு நேரம் இல்லை.திரும்பத்திரும்பஅதைப் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமுமில்லை.” – இப்படி அங்கு குறிப்பிட்டார் மாவை.

# ஆவா குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதக்குழுவோ, இராணுவத்தினது குழுவோ அல்ல. மாறாக அது மோட்டார் சைக்கிள் கொள்ளைக் குழு.

இந்தக் குழு தொடர்பான சகல தகவல்களையும் பாதுகாப்புப் பிரிவு சேகரித்துள்ளது. அடுத்து வரும் நாள்களில் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். – என்றார்.

இதேவேளை, இக்குழுவை வைத்து சிலர் அரசியல் இலாபம் தேடமுயற்சிப்பதாகவும்பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டினார்.

# மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, ரெலோ ஆகிய ஏழு கட்சிகளும் நேற்று நடத்திய கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டது.

இத் தீர்மானங்கள் தொர்பில் ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடைய படுகொலை தொடர்பிலே பாரபட்சமற்றதும் பூரணமானதுமான புலன் விசாரணைகளையும் எவ்வித தலையீடுகளுமற்ற நீதி விசாரணைகளையும் நாங்கள் கோருகின்றோம். விசாரணை ஊடாக இப்படுகொலைகளின் பின்னணி கண்டறியப்பட வேண்டும். இவ்விடயத்தில் முழு உண்மையும் கண்டறியப்பட்டால் மாத்திரமே எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதைத் தடுக்க முடியும்.

இப் படுகொலைகளைத் தொடர்ந்து வாள் வெட்டுக்கோஷ்டிகள் எனக் கூறப்படுகின்ற குழுக்களை சம்பந்தப்படுத்தி வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள், நிகழ்ந்த தாக்குதல் சம்பவங்கள் போன்றவை காரணமாக வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், பொது மக்கள் மத்தியில் ஓர் அச்ச சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதனை மேலும் தீவிரப்படுத்தும் விதத்தில் சில தரப்பினரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுசட்டமும்ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டும். பொது மக்களின் பாதுகாப்பை உறு திப்படுத்த வேண்டும். எமது இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்திகவனவீர்ப்புப்போராட்டம் ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

இக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.

மேலும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருக்கும்நிலைமைதொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியையும் பிரதமரையும் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட குழு சந்தித்து வலியுறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-40)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.